பக்கங்கள்: 12 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 05 வள்ளுவர் ஆண்டு 2052 புரட்டாதி 14 வியாழக்கிழமை 30.09.2021 கதிர் 329

### இனி அது ரகசியம் அல்ல!

மன்னார் பிரதேச சபைத் தவிசாளர் தெரிவு நேற்று நடைபெற்றது. அதை ஒட்டி நேற்று இப்பத்தியில் நான் கூறியவை நடந்தேறியுள்ளன.

தெரிவு நடைபெறும் அதே சமயம் பழைய தவிசாளரைப் பதவி நீக்கியமையை பக்கம்02

## ஊரடங்கு நாளை தளர்வு

### இன்று புதிய சுகாதார வழிகாட்டல் வெளியீடு



நாட்டில்கடந்தஓகஸ்ட்20ஆம் திகதி தொடக்கம் நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை நாளை ஒக்டோபர் முதலாம் திகதி அதிகாலை 4 மணிக்குத் தளர்த்தப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் இதற்கான ☞2

## நாட்டை முழுமையாக திறப்பது ஆபத்தானது

### சுகாதார வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை

இலங்கையில் 75 வீதமான மக்களுக்கேனும் தடுப்பூசி ஏற்றாது நாட்டை முழுமையாகத் திறப்பது அச்சுறுத்தலானது. நாட்டைத் திறந்துவிட்டு தடுப்பூசி ஏற்றலாம் எனக் கருதினால் மோசமான வைரஸ் பரவல் நிலை உருவாகும்.

– இவ்வாறு சுகாதார வைத்திய நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

நாடு திறக்கப்பட்டாலும் கடுமையான சுகாதாரக் கட்டுப்பாடுகளைநடைமுறைப்படுத்தவேண்டும் எனவும், இன்னமும் நாடு சிவப்பு எச்சரிக்கையில் இருந்து விடுபடவில்லை எனவும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர். ☞2

# சிங்கள மக்களைத் தற்போது மூடர்களாக்குகிறார் கோட்டா



### சிறீதரன் எம்.பி. சுட்டிக்காட்டு

(இ. கலையமுதன்)

புலம்பெயர் தமிழர்களைக் காட்டி சிங்கள மக்களுடைய வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலைமையிலான அரச தரப்பினரும் தற்போது சிங்கள மக்களை மூடர்களாக்குகின்றனர்.

– இவ்வாறு தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். ☞2

## மேலும் 61 பேர் சாவு!

இலங்கையில் மேலும் 61 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் சாவடைந்துள்ளனர். ☞2

## மூன்றாவது தடுப்பூசிக்கு அனுமதி!

இலங்கையில் மூன்றாவது (பூஸ்டர்) தடுப்பூசியாக பைஸர் தடுப்பூசியைச் செலுத்துவதற்கு அனுமதிவழங்கப்பட்டுள்ளதுஎன அறிவிக்கப்பட்டுள்ளது. ☞2

## வாள்களுடன் ஒருவர் கைது

யாழ்., அச்சுவேலிப் பகுதியில் வாள்களுடன் ஒருவர் யாழ். மாவட்ட குற்றத் தடுப்பு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். ☞11

## யானை தாக்கி விவசாயி பலி!

மட்டக்களப்பு மாவட்டம், வாகரை பிரதேச செயலாளர் பிரிவில் வெள்ளாமைச்சேனை பிரதேசத்தில் நேற்று ☞2

## பழிவாங்குகின்றது அரசு!

### சு.கவின் பொதுச்செயலர் கடும் சீற்றம்

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான விசாரணைகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக அரசியல் ரீதியான பழிவாங்கல்களை மேற்கொள்ள அரசு முயற்சிக்கின்றது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச்செயலாளரும் இராஜாங்க அமைச்சருமான தயாசிறி ஜயசேகர குற்றஞ்சாட்டினார்.

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் சூத்திரதாரி சஹ்ரான் ஹாசிமின் கைத்தொலைபேசிக்கு என்ன நடந்தது என்பது குறித்து விசாரணை ஒன்று நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார். ☞2



## 941 பேருக்கு நேற்று தொற்று

இலங்கையில் தொடர்ந்தும் மூன்றாவது நாளாகவும் ஆயிரத்துக்கும் குறைவான கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அதற்கமைய கொரோனாத் தொற்று உறுதியான மேலும் 941 பேர் நேற்று அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதையடுத்து ☞2

# அவசரமாக கொழும்பு விரைகின்றார் இந்திய வெளிவிவகாரச் செயலாளர்

### கோட்டா, மஹிந்த, சம்பந்தனைச் சந்திப்பார்

இந்திய வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஹர்ஷ் வர்தன் ஷ்ரிங்லா அவசர பயணம் மேற்கொண்டு கொழும்பு வருகின்றார்.

ஒக்ரோபர் 2ஆம் திகதி முதல் 5ஆம் திகதி வரை கொழும்பில் தங்கியிருக்கும் அவர், கொழும்பில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் உள்ளிட்டவர்களைச் சந்திக்கவுள்ளார். ☞11



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

ஆட்சேபித்து அவர் தொடுத்த வழக்கு நேற்று நீதிமன்றுக்கு வருவதாகத் தெரிவித்திருந்தேன். நேற்றுத் தெரிவாகும் புதிய தவிசாளரின் பெயரை வர்த்தமானியில் அறிவிப்பதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று இடைக்காலத் தடை விதித்துள்ளது. இப்போது மனுதாரர் தரப்பு வாதம் மற்றும் பிரசன்னத்துடன் – ஒரு தலைப்பட்ச வாதத்தின் அடிப்படையில் – இந்த இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இரண்டு வாரங்களின் பின்னர் எதிர்மனுதாரர் தரப்பு வாதங்களையும் நீதிமன்றம் கணக்கில் எடுத்தால் இடைக்காலத் தடை நீக்கப்படவும் வாய்ப்புண்டு.

நேற்றைய தெரிவில் தமிழ்க் கூட்டமைப் பின் வேட்பாளர் வெற்றி பெறுவதாயின் கடைசி நேரத்தில் அதிசயம் ஏதும் நிகழ்ந்து, குளறுபடியான ஒன்று திரள்வு, குத்துக்கரணங்கள் இடம்பெற வேண்டும், அதற்கு சாத்தியமில்லை என்பதுதான் நிலைமை – என நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

என் எதிர்வு கூறலுக்கு மாறாக அதிசயங்கள் நிகழ்ந்தன. எதிர்பாராத ஒன்று திரள்வு இடம்பெற்றது. அப்படியிருந்தும் தமிழ்க் கூட்டமைப்பு வேட்பாளர் 8 – 9 என்ற அடிப்படையில் ரிஷாத் ஆதரவு அணியிடம் தோற்றுப் போனமை துர்ப்பாகியமே.

'கூட்டமைப்பின் ஏழு பேரில் ஒருவர் கொன்ஸால் குலாஸ். அவர் தம்மைத் தவிசாளர் பதவிக்கு நிறுத்தும்படி கோரியுள்ளார். அவரை விடுத்து கதிர்காமநாதன் (விஜயன்) என்பவரை நிறுத்தியுள்ளது கூட்டமைப்பு. அதனால் குலாஸ் இன்று சபைக்குச் செல்லமாட்டார்.' – என்று நேற்று இப்பத்தியில் குறிப்பிட்டிருந்தேன்.

இதில் குலாஸ் கிறிஸ்தவர். விஜயன் சைவர். தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர்களில் பலர் கிறிஸ்தவர்கள். மன்னார் நிலைமை நமக்குத் தெரிந்ததுதான். நேற்றுமுன்தினம் இரவு கிறிஸ்தவ மதத் தலைவர்களின் தலையீடும் சில இடம் பெற, வேட்பாளர் மாற்றம் செய்யப்பட்டார். விஜயனை விலத்தி, குலாஸுக்கு வழங்க இணக்கம் காணப்பட்டது. கூட்டமைப்பின் ஏழு உறுப்பினர்களையும் பிரியாமல் ஒன்று சேர்த்து – ஐக்கியமாக – வாக்களிக்க வைப்பதற்கு கூட்டமைப்பின் – தமிழரசுக் கட்சியின் – வன்னி மாவட்ட எம்.பி.சார்ள்ஸ் நிர்மலநாதன் எடுத்த முயற்சி வெற்றியளித்தது. அது பாராட்டத்தக்கது. எனினும் அதற்கு மேல் முஸ்லிம் காங்கிரஸின் ஓர் உறுப்பினரின் ஆதரவை மட்டுமே கூட்டமைப்பால் பெறமுடிந்தது.

ஆறு உறுப்பினர்களைக் கொண்ட ரிஷாத் அணிக்கு ஈ.பி.டி.பி., ஈ.பி.ஆர்.எல்.எவ். மற்றும் முஸ்லிம் காங்கிரஸின் ஒவ்வொரு உறுப்பினர்கள் ஆதரித்தமையால் அந்த அணி வென்றது.

எது, எப்படி என்றாலும், பிளவுகள், உள்கட்சி மோதல்களை மூடை கட்டி ஒதுக்கி வைத்து விட்டு, ஐக்கியப்பட்டு நின்ற கூட்டமைப்பின் மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் பாராட்டப்பட வேண்டியவர்களே – ஒரு வாக்கினால் வெற்றியை ஈட்ட முடியாமல் போனாலும்!

★ ★ ★

நான் நேற்று இப்பத்தியில் கூறியபடி சுமந்திரனுக்கு எதிரான புராணபடலத்தை மாவை, சித்தர், செல்வம் (அவரது கட்சியின் செயலாளர் ஜனாவும் சேர்ந்து) சம்பந்தர் வீட்டில் நேற்று மாலை பாடி முடித்துள்ளனர்.

காமராஜர் பாணியில் 'ஆகட்டும் பார்க்கலாம்' எனக் கூறி அவர்களை அனுப்பி வைத்திருக்கின்றார் சம்பந்தன் என்று முதல் கட்டத் தகவல்கள் தெரிவித்தன.

சம்பந்தனுடன் தாங்கள் ஒரு தடவை சந்தித்துப் பேச வேண்டும் என மாவை – செல்வம் – சித்தர் அணி கேட்டுக் கொண்டமைக்காக அதற்கு நேரம் வழங்கினார் சம்பந்தன்.

ஆனால் அந்தச் சந்திப்பை – சுமந்திரன் பங்கு பற்றாத கூட்டத்தை – கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டமாகக் காட்டுவதற்கு மூவரணி முயற்சித்திருக்கின்றது. அதாவது கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுவில் சுமந்திரன் இல்லை, அப்படித்தான் இனிக் கூட்டமைப்பு கூடும் என்று காட்டுவது அவர்களின் திட்டம். அப்படித்தான் கொழும்பு ஊடகங்கள் சில வற்றுக்கும் முதலில் தகவல் தெரிவிக்கப்பட்டது. விடயம் தெரியாத – விடயம் விளங்காத – ஓர் ஊடகவியலாளர் சம்பந்தனிடமே அது பற்றிக் கேட்க சம்பந்தன் உஷாராகி விட்டார்.

கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் குழுக் கூடவில்லை என்று அந்தப் பத்திரிகையாளருக்குத் தெரிவித்தமை மட்டுமல்லாமல், நேற்று சந்திப்புக்கு வந்த மூன்று கட்சித் தலைவர்களிடமும் 'நீங்கள் தனியாகச் சந்திக்க நேரம் கேட்டீர்கள், அதற்கான சந்திப்பு இது, கூட்டமைப்பு ஒருங்கிணைப்புக் கூட்டம் அல்லவே' – என்று உறுதிபடத் தெரிவித்தார் சம்பந்தன்.

அதனால் நேற்றைய கூட்டத்தை சுமந்திரனுக்கு எதிராக சம்பந்தன் ஐயாவிடம் முறைப்பாடு தெரிவிக்கும் சந்திப்பாக ஊடகங்களிடம் உண்மையைத் தெரிவிக்கும் நிலைமை மூன்று தலைவர்களுக்கும் ஏற்பட்டது.

சுமந்திரனுக்கு எதிரான முறைப்பாடு என்றால், என்ன முறைப்பாடு என்றும் கூறவேண்டுமல்லவா? வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் தெரிவில் கூட்டமைப்பு வேட்பாளரை சுமந்திரனே தோற்கடித்தார் என்பதுதான் குற்றச்சாட்டு.

அந்தக் குற்றச்சாட்டை சம்பந்தன் செவிமடுத்தாரா, என்ன பதில் கூறினார் என்ற விடயங்களை நாளை வாசகர்களுக்குத் தரக் கூடியதாக இருக்கும் என நினைக்கிறேன்.

ஆனால் அந்த நகரசபைத் தெரிவில் கூட்டமைப்பு வேட்பாளர் என்ற பெயரில் செல்வம் அணியினால் நிறுத்தப்பட்டவர் – சதீஷ் என்பவர் – ரெலோவின் எழுத்து மூல இணக்கத்துடன் கூட்டமைப்பில் இருந்து ஏற்கனவே வெளியேற்றப்பட்டவர். அதற்கு எதிரான வழக்கு நிலுவையில் இருப்பதால் சபையின் உறுப்பினராக அவர் நீடிக்கின்றார். கூட்டமைப்புக்கு எதிரான சதீஷின் திருகுதாளம் நீண்டது. பல தடவைகள் எழுதியாயிற்று. அதனால் மீண்டும் எழுதி, இடத்தை வீணாக்க வேண்டியதில்லை என்பதால் விட்டு விடுகிறேன்.

அவரை வேட்பாளராக நிறுத்தியமை குறித்து தமிழரசுக் கட்சியினர் எல்லோருக்கும் கடும் சீற்றம். அதனையே சுமந்திரன் பிரதிபலித்தார். சதீஷை எப்படி அந்தப் பதவிக்கு நிறுத்த முடியும் என்று அண்மையில் தமக்கு நெருக்கமான வட்டாரங்களிடம் சீற்றத்துடன் கேட்டவர் மாவையர். ஆனால் இப்போது அதே சதீஷுக்கு ஆதரவாக – சுமந்திரனுக்கு எதிராக – சம்பந்தனிடம் முறைப்பாடு செய்வதற்கு சித்தர், செல்வத்தின் தோளில் கைபோடாத குறையாக தோழமை அமைத்துப் புறப்பட்டிருக்கின்றார் மாவையர். தமிழரசை, ரெலோ – புளொட்டிடம் விற்கும் மாவையரின் இந்தச் சின்னத்தனமான போக்கு தமிழரசுக் கட்சி வட்டாரங்களில் பெரும் சீற்றத்தை உருவாக்கியிருக்கின்றமையை நேற்றிரவு கிட்டிய தொலைபேசி அழைப்புகளில் உணரமுடிந்தது. மத்திய குழுவைக் கூட்டுங்கள், மாவையை ஒரு கைபார்க்கிறோம் என்று பல உறுப்பினர்கள் சீறுவதையும் அறிய முடிந்தது.

உத்தேச மத்திய குழுவை சூடாக நடத்துவதற்கான களத்தை மாவை அமைத்து விட்டார் – ரெலோ மற்றும் புளொட்டிடம் அதிகம் அடிபணிந்து.

நாளை பிறக்கும் புது மாதத்தில் தமிழரசு மத்திய குழு கூட்டம் நடந்தால், ஊடகங்களுக்கு நல்ல தீனி இருக்குமோ இல்லையோ கட்சித் தலைவருக்கு நல்ல அர்ச்சனை மட்டும் இருக்கும் என்பது நிச்சயம்...!

– மின்னல் –

## சிங்கள மக்களைத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அவரது இல்லத்தில் வைத்து நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

ஐக்கிய நாடுகள் மன்றம் வரை சென்று இலங்கையினுடைய ஜனாதிபதி சில கருத்துக்களைத் தெரிவித்தார். அதில் இலங்கையினுடைய தமிழ் மக்களின் குரலாக இருக்கும் புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களை நீங்கள் வாருங்கள்; நாங்கள் பேசுவோம் என்று அழைப்பு விடுத்திருக்கின்றார்.

இதே ஜனாதிபதிதான் தனது தேர்தல் காலத்தில் புலம்பெயர் தமிழர்கள் தமிழீழத்தைப் பெற்று விடுவார்கள், எம்மை மின்சாரக் கதிரையில் ஏற்றிவிடுவார்கள் என்றும், சர்வதேச சமூகத்துக்குப் பிழையான கருத்தைக் கொடுத்து நாட்டைப் பிளவுபடுத்துகிறார்கள் என்றும் சிங்கள மக்களிடையே புலம்பெயர் தமிழர்கள் பற்றிய இனவாதக் கருத்துக்களைத் தெரிவித்து ஆட்சிக்கு வந்தார்.

புலம்பெயர் தமிழர்களைக் காட்டி சிங்கள மக்களுடைய வாக்குகளைப் பெற்ற ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், அவர் தலையிலான அரச தரப்பினரும் தற்போது சிங்கள மக்களை மூடர்களாக்குகின்றனர். சிங்கள மக்கள் இதனைப் புரிந்துகொள்ள வேண்டும்

முஸ்லிம்களின் பொருளாதார நிலையை அழித்து நாசமாக்கி சிங்கள இளைஞர்களை இனவாத ரீதியில் முஸ்லிம்களுக்கு எதிராக திசை திருப்பிய இந்த அரசு இன்று அரேபிய நாடுகளுக்குச் சென்று கெஞ்சுகின்றனர். அரசு ஏன் இரண்டு முகத்தைக் காட்டுகின்றது?

புலம்பெயர்ந்தவர்களைப் பேச அழைப்பது தொடர்பாக மக்களின் ஆணையை அதிகமாகப் பெற்ற கட்சி என்கின்ற அடிப்படையில் இதனை நாங்கள் முழுமையாக வரவேற்கிறோம். ஆனால், இந்த அரசு இதயசுத்தியுடன் அதனைச் செய்ய முன்வரவேண்டும் – என்றார்.

## ஊடரங்கு நாளை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது எனக் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

இதன்படி புதிய சுகாதார வழிகாட்டல்கள் அடங்கிய அறிக்கை இன்று வெளியிடப்படும் எனவும் இராணுவத் தளபதி மேலும் குறிப்பிட்டார்.

## மேலும் 61 பேர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 12 ஆயிரத்து 847ஆக அதிகரித்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்த 61பேரில் 36 பெண்களும் 25 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் 9 ஆண்கள், 5 பெண்கள் என 14 பேர் 30 – 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 47 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 16 ஆண்களும், 31 பெண்களும் அடங்குகின்றனர்.

## 941 பேருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

நாட்டில் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 5 இலட்சத்து 16 ஆயிரத்து 465 ஆக உயர்வடைந்துள்ளது என அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 770 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

அதன்படி, நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 56 ஆயிரத்து 587 ஆக அதிகரித்துள்ளது.

## யானை தாக்கி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

அதிகாலை யானை தாக்கியதில் விவசாயி ஒருவர் உயிரிழந்துள்ளார் என்று வாழைச்சேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த விவசாயி, பெரும்போக வேளாண்மை செய்கைக்கு தனது வயலைத் தயார்ப்படுத்து வேலையில் ஈடுபட்டிருந்தார். வயலில் தங்கி வேலை செய்து வந்த நிலையில் நேற்று அதிகாலை வயல் பிரதேசத்துக்குள் ஊடுருவிய யானை அவர் தங்கியிருந்த வாடியைச் சேதப்படுத்தியதுடன் அவரையும் தாக்கியதில் அவர் உயிரிழந்துள்ளார்.

ஓட்டமாவடி பிரதேச செயலாளர் பிரிவில் மீராவோடை பாடசாலை வீதியைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தந்தையான அலியார் முகம்மது காசிம் (வயது 54) என்பவரே இவ்வாறு மரணமடைந்துள்ளார். குறித்த மரணம் தொடர்பான விசாரணைகளை வாழைச்சேனைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## மூன்றாவது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குறித்த தகவலை சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்தியர் அசேல குணவர்தன வெளியிட்டுள்ளார்.

அதன் அடிப்படையில், 60 வயதுக்கு மேற்பட்டோர், சிறுநீரகக் கோளாறு, புற்றுநோய் போன்ற பாரதூரமான நோய் களைக் கொண்டுள்ள 30 –60 வயதுக்கு உட்பட்டோருக்கு இவ்வாறு மூன்றாவது தடுப்பூசி செலுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், சுகாதார பணியாளர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் ஆகியோருக்கும் இவ்வாறு பைஸர் தடுப்பூசியைச் செயலூட்டியாக செலுத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது எனச் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாட்டை முழுமை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:–

நாட்டில் தனிமைப்படுத்தல் ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள காலத்திலும் மக்களின் செயற்பாடுகள் முழுமையாகத் திருப்திகரமானதாக இருக்கவில்லை என்ற பொதுவான விமர்சனம் உள்ளது.

அதேபோல், பொதுப் போக்குவரத்தை மிகக் கவனமாக கையாள வேண்டியுள்ளது. பஸ்களில், ரயில்களில் 50 வீதமான பொதுமக்களுக்கே இடமளிக்க வேண்டும்.

நாட்டில் தற்போதும் டெல்டா வைரஸ் அச்சுறுத்தல் நிலைமை நீங்கவில்லை. நாடு முழுவதும் டெல்டா வைரஸ் பரவியுள்ள நிலையில் நாட்டில் 75 வீதமானோருக்கேனும் தடுப்பூசி ஏற்றாது நாட்டை மீளத் திறப்பது அச்சுறுத்தலான நிலைமையாகும்.

தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டம் நிறைவடையாது நாட்டைத் திறந்து வைரஸ் பரவலுக்கு மீண்டும் இடமளித்தால் மிக மோசமான தாக்கம் உருவாகும்.

எப்போதுமே நாம் ஏனைய நாடுகளை உதாரணமாகக் கொண்டு செயற்பட வேண்டிய கட்டாயம் உள்ளது.

கடந்த சில நாள்களாக நாட்டில் கொவிட் கொரோனா மரணங்களின் எண்ணிக்கை குறைவடைந்துள்ள போதிலும், அச்சுறுத்தல் நிலையை நாம் கடக்கவில்லை.

சிவப்பு எச்சரிக்கை நிலை குறைவடைந்துள்ளதே தவிர, எச்சரிக்கை நிலையில் இருந்து நாம் இன்னமும் விடுபடவில்லை – என்றனர்.

## பழிவாங்குகின்றது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி..)

குருநாகல் பிரதேசத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றைத் தொடர்ந்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

சஹ்ரான் பயன்படுத்திய கைத்தொலைபேசியின் பாகங்கள் வெளிநாடொன்றுக்கு எடுத்துத் செல்லப்பட்டன. அது தொடர்பாக விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

தாக்குதலை நடத்தியவரின் தொலைபேசியில் எல்லா விடயங்களும் இருக்கும் நிலையில், தொலைபேசி வெளிநாடு ஒன்றுக்கு ஏன் அனுப்பப்பட்டது?

வெளிநாட்டுப் புலனாய்வுப் பிரிவொன்று குறித்த தொலைபேசியின் பாகங்களைக் கொண்டு செல்ல இலங்கையின் நீதிமன்றமும் பொலிஸாரும் அனுமதியளித்தமை சந்தேகத்துக்குரியது.

அந்தத் தொலைபேசி பாகங்களைக் கண்டுபிடிப்பதன் ஊடாக தாக்குதலின் பிரதான சூத்திரதாரியைக் கண்டுபிடிக்கலாம். அதன்போதே, இதன் பின்னணியில் உள்ள அரசியல்வாதிகளையும் தேடிக் கொள்ளலாம்.

முன்னாள் ஜனாதிபதி அல்லது அமைச்சர்களுக்கு விரல் நீட்டுவதில் அர்த்தமில்லை. உண்மையான சூத்திரதாரிகள் அடையாளம் காணப்பட வேண்டும் – என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

# அரசியல் கைதிகள் விடுதலை; பேச்சு முன்னெடுக்கப்படுகிறது

## வியாழேந்திரன் தெரிவிப்பு



தமிழ் மக்களின் பெரும் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் அவர் தலைமையிலான நல்லாட்சி அரசாங்கமும் அரசியல் கைதிகள் விடுதலையிலும், காணி விடுவிப்பு விவகாரத்திலும் சிறந்ததீர்வைபெற்றுக்கொடுக்க வில்லை.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ ஒரு தடவையில் 16 தமிழ் அரசியல் கைதிகளை விடுதலை செய்துள்ளார். ஏனைய தமிழ் அரசியல்கைதிகளின்விடுதலை தொடர்பில் முறையான பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணமக்களுக்குஅபிவிருத்தி மற்றும் அரசியல் உரிமைகள் ஒருமித்த வகையில் கிடைக்கப் பெறும் என பின்தங்கிய கிராம பிரதேச அபிவிருத்தி, வீட்டு விலங்கின வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதாரப் பயிர்ச்செய்கை மேம்பாட்டு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

இறக்குமதி விடயத்தில் அரசாங்கம் கடினமான கொள்கையைப் பின்பற்றவில்லை. அத்தியாசிய மூலப் பொருள்கள் தற்போதும் இறக்குமதி செய்யப்படுகின்றன. அத்தியாவசிய பொருள்களுக்கானகேள்வியை தேசிய மட்டத்தில் பூர்த்தி செய்வதற்கான அடிப்படை நடவடிக்கைகள் தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தேசிய பொருளாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் இறக்குமதித் துறையில் ஒரு சில மட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன. தேசிய உற்பத்திகளுக்குப்பாதிப்பை ஏற்படுத்தும் இறக்குமதிப் பொருள்களைத் தடை செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

மக்களுக்குப் பாதிப்பை ஏற்படுத்தும் செயற்பாடுகளை அரசாங்கம் ஒருபோதும் முன்னெடுக்காது. மக்கள் நெருக்கடிக்குள்ளானால் அது அரசாங்கத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தும். மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்க அரசாங்கம் பொறுப்புடன் செயற்படுகிறது.

கொவிட்–19 வைரஸ் தாக்கத்தால் ஒரு சில விடயங்களில் குறைபாடுகள் காணப்படுகின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறோம். பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், மக்களுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் எந்நிலையிலும் கவனம்செலுத்தியுள்ளது.

தற்போதைய நெருக்கடியான சூழ்நிலையை வெகு விரைவில் சீர் செய்து கொள்ள முடியும். அத்தியாவசியப் பொருள்களைப்பெறுக்கொள்வதில் மக்கள் எதிர்கொள்ளும் அசௌகரியங்களுக்கு விரைவில் சாதகமான தீர்வு வழங்கப்படும்.

தற்போதைய எதிர்க்கட்சி ஆட்சியிலிருந்திருந்தால் நாடு பாரிய வீழ்ச்சியை நோக்கி சென்றிருக்கும். கண்ணுக்குத் தெரிந்த தாக்குதலைக் கூடத் தடுக்க முடியாதவர்களிடம் ஆட்சியதிகாரம் ஒப்படைக்கப்பட்டிருந்தால் கண்ணுக்குப் புலப்படாத வைரஸ் தொற்று வெற்றி பெற்றிருக்கும். அரசாங்கத்தால் ஆக்கபூர்வமான அபிவிருத்தி செயற்திட்டங்கள் நாடு தழுவிய ரீதியில் முன்னெடுக்கப்படுகின்றன.

கொவிட் தாக்கம் பெரும் சவாலாக காணப்பட்டது. அந்தச் சவால்கூடத் தற்போது சிறந்த முறையில் கையாளப்பட்டுள்ளது. இதனையும் கூட எதிர்தரப்பினர் அரசியல் இலாபம் தேடிக் கொள்ளும் வகையில் விமர்சனங்களை மாத்திரம் முன்வைத்து வருகிறார்கள்.

சுற்றுலாத்துறை வீழ்ச்சியடைந்துள்ளது என்று தற்போது போர்க்கொடி தூக்கும் எதிர்த்தரப்பினர் கடந்த காலத்தில் இடம்பெற்ற சம்பவங்களை மறந்து விட்டார்கள்.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் நாட்டில் சுற்றுலாத் துறைக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியது. 2019 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றத்தைத் தொடர்ந்து சுற்றுலாத்துறை சற்று முன்னேற்றமடைந்த போது கொவிட் –19 பெருந்தொற்று சுற்றுலாத் துறையில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியது. இதனை அரசாங்கத்தின் பலவீனம் என்று எவராலும் குறிப்பிட முடியாது. சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களுக்கு அமைய சுற்றுலாத்துறையை ஆரம்பிக்க உரிய திட்டங்கள் தற்போது செயற்படுத்தப்பட்டுள்ளன.

நல்லாட்சி அரசாங்கத்தின் காலத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ் தலைமைகள் அரசாங்கத்திற்கு ஆதரவாகவே செயற்பட்டார்கள். ஆனால் காலம் காலமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாண தமிழ் மக்கள் எதிர்கொண்ட அடிப்படைப் பிரச்சினைகளுக்கு ஒருபோதும் இவர்கள் தீர்வை பெற்றுக்கொடுக்கவில்லை.

2005 தொடக்கம் 2014 ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல்வேறு அபிவிருத்தி செயற்திட்டபணிகள் முன்னெடுக்கப்பட்டன. கொவிட் தாக்கத்துக்கு மத்தியில் அரசாங்கம் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் பல அபிவிருத்தி செயற்திட்ட பணிகளை முன்னெடுத்துள்ளது.

தமிழ் மக்கள் மத்தியில் காணப்படும் பல தீர்க்கப்படாத பிரச்சினைகளுக்குத்தீர்வு காண அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது. காணி விடுவிப்பு, அரசியல் கைதிகளின் விடுவிப்பு, மக்களின் வாழ்வாதாரத்தோடு கூடிய அபிவிருத்தி பணிகள் ஆகிய விடயங்கள் தொடர்பாக நடைமுறை கொள்கைக்கு அமைய தீர்வு வழங்கப்பட்டுள்ளது. எதிர்வரும் காலங்களில் அனைத்துக் கோரிக்கைகளுக்கும் தீர்வு கிடைக்கப் பெறும் என்று எதிர்பார்க்கிறோம். மக்களின் பிரச்சினைகளுடன் தொடர்ந்து அரசியல் செய்ய முடியாது.

தமிழ் மக்களின் பெரும் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன குறைந்தது ஐந்து அரசியல் கைதிகளுக்கு கூட பொது மன்னிப்பு வழங்கி விடுவிக்கவில்லை. ஆனால் தற்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ 16 தமிழ் அரசியல்கைதிகளைஒரேதடவையில் விடுவித்தார். மிகுதியாகவுள்ள அரசியல் கைதிகளை விடுவிப்பதற்கானசாத்தியம்அதிகளவில் காணப்படுகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாண மக்களுக்கான அபிவிருத்தியும், அரசியல் உரிமைகளும் முரண்பட்ட வகையில் பெற்றுக் கொள்ளப்படும். காலம் காலமாக அரசாங்கத்துடன் முரண்பட்டுக் கொண்டிருந்தால் மக்களுக்கு அபிவிருத்தியும் கிடைக்காது, உரிமைகளும் கிடைக்காது. மக்களின் கண்ணீருடன் தொடர்ந்து அரசியல் செய்ய முடியாது. மக்களின் அடிப்படை பிரச்சினைகளுக்குத் தீர்வு பெற்றுக் கொடுக்கும் பொறுப்பு அரசியல் தலைமைகளுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் உண்டு. – என்றார்.

# ஹரீஸ் எம்.பியின் நடவடிக்கையால் தமிழ் பேசும் இன உறவுகள் பாதிப்பு

## கலையரசன் எம்.பி. காட்டம்



கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் குறுக்குத் தனமாக செயற்படுகின்றார். எனவே, இவரால் தான் தமிழ் பேசும் இனங்களின் உறவுகள் பாதிக்கப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் நாவிதன்வெளியில் உள்ள காரியாலயத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து, அம்பாறை மாவட்டத்தில் எமது தமிழ் மக்கள் நாளாந்தம் சொல்ல முடியாத துயரத்தை அனுபவித்து வருகின்றனர். அதே வேளை கடந்த காலத்தில் பெரும்பான்மை இனத்தவர்களால் பாதிக்கப்பட்டிருந்தாலும் தற்காலத்தில்எமதுமொழியைப் பேசுகின்ற அரசியல் வாதிகளின் நிகழ்ச்சி நிரல்கள் அம்பாறை மாவட்டத்தில் அரங்கேறி வருகின்றன.

குறிப்பாக கல்முனை பிராந்தியத்தை எடுத்துப் பார்க்கும் போது ஏதாவது ஒரு விடயத்துக்காக தமிழர் பிரதேசங்களுக்குச் சென்று நிலங்களை கபளிகரம் செய்கின்ற குழுக்களின் செயற்பாடு, முஸ்லிம் காங்கிரஸின் பிரதித் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எச்.எம். ஹரீஸ் கல்முனை வடக்கு பிரதேச செயலகத்தை தரமுயர்த்துகின்ற விடயத்தில் மிகவும் குறுக்குத் தனமாக செயற்பட்டு வருகின்றார் என்பதோடு அவர்களுக்கு சாதகமாக இந்த அரசாங்கம் செயற்படுவதும் அடிக்கடி நிகழ்கின்றது.

தமிழ் பேசும் இனம் என்று தேர்தல் காலத்தில் முஸ்லிம் அரசியல் தலைவர்கள் பேசுவதும் தேர்தலின் பின்னர் அரசுடன் சேர்ந்து தமிழ் பேசும் இனத்துக்கு எதிராக செயற்படுவதுமாக இருக்கின்றனர். நாட்டில் எந்த அரசாங்கம் வந்தாலும் அவர்களுடன் இணைந்து சலுகைகளை பெறும் நாடாளுமன்ற உறுப்பினர்ஹரீஸ் போன்றவர்களால் தான்தமிழ் பேசும் இனங்களின் உறவுகள் பாதிக்கப்படுகின்றனர்.

இவர் அரசுடன் இணைந்து வடக்கு பிரதேச செயலகத்துக்கான காணி அதிகாரம் கிடைக்கப்பெறக் கூடாது என செயற்படுகின்றார் என்பதே நிதர்சனமான உண்மை. – எனத் தெரிவித்தார்.

# அவசர சிகிச்சைப் பிரிவுகளில் 83 தொற்றாளர்கள்!

அவசர சிகிச்சைப் பிரிவுகளில் 83 கொரோனா நோயாளர்கள் தற்போது சிகிச்சை பெற்று வருகின்றனர் எனசுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேநேரம், சிகிச்சை மத்திய நிலையங்களில் 382 நோயாளர்கள் ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனக் கொரோனா தொடர்பான இணைப்பு செயலணியின் பணிப்பாளர், வைத்தியர் அன்வர் ஹம்தானி தெரிவித்துள்ளார்.

இதற்கு முன்னர் ஒட்சிசன் தேவையுடைய நோயாளர்களின் எண்ணிக்கை ஆயிரத்து 100 ஆக அதிகரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி அரசியலை நடத்துவது இயலாது

## சுந்தரேசன் தெரிவிப்பு

ஊடகவியலாளர்களை அச்சுறுத்தி அரசியல் நடத்த முடியாது என்பதை இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் புரிந்து கொள்ள வேண்டும் என தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட ஏற்பாட்டாளர் என்.சுந்தரேசன் தெரிவித்துள்ளார். மட்டு. ஊடக அமையத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

அண்மையில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்த அநுராதபுரம் சிறைச்சாலைக்குச் சென்று அங்கிருந்த தமிழ் அரசியல் கைதிகளின் தலையில் கைத்துப்பாக்கியை வைத்து விரட்டியமை ஒரு பாரிய குற்றமாகும்.

சிறைக்கைதிகள் ஜனநாயக முறைப்படி நீதிமன்றத்தின் கட்டளைக்கு உட்பட்டு தான் அங்கிருக்கின்றார்கள். எனவே இது ஒரு நீதிமன்றத்தை அவமதிக்கும் செயலாகும்.

அரசு இதைப்பற்றி விசாரிப்பதற்குக் குழு அமைத்திருக்கின்றது. இதற்கு குழு அமைக்க வேண்டிய அவசியமில்லை. இது நீதிமன்றத்துக்குச் செல்ல வேண்டிய விடயம். இது நீதிமன்றத்தால் தான் விசாரிக்கப்பட வேண்டும்.

நீதி அமைச்சர் இந்த விடயத்துக்கு மன்னிப்புக் கேட்கின்றார். இதில் மன்னிப்புக் கேட்க வேண்டியதில்லை. இது மன்னிப்புக் கேட்கும் விடயமும் அல்ல, மன்னிக்கும் விடயமும் அல்ல, மறக்கும் விடயமும் அல்ல. இது ஒரு பாரிய குற்றச் செயலாகும்.

அதனை விட ஒரு பெரிய மடத்தனமான வேலை மட்டக்களப்பில் நடந்திருக்கின்றது. பொதுஜன பெரமுன மட்டக்களப்பு மாவட்டத்துக்கு இவரை அனுப்பியிருக்கின்றது. இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன், சந்திரகுமார் ஆகியோர் இவரை வரவேற்றிருக்கின்றார்கள்.

அவர்கள் இவரை அனுப்ப வேண்டாம் என்று கூறியிருக்க வேண்டும். இவரது வரலாறு தெரியாதவர்களா இவர்கள்.

இது தொடர்பில் கேள்வியெழுப்பிய ஊடகவியலாளருக்கு இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் அச்சுறுத்தல் விடுத்திருக்கிறார்.

இவ்வாறு அச்சுறுத்தி அரசியல் நடத்த முடியாது என்பதை அவருக்கு நான் சொல்லிக் கொள்ள விரும்புகின்றேன். உங்களை இந்த இடத்தில் வைத்தவர்கள் மக்கள். மக்களையோ, ஊடகவியலாளர்களையோ அச்சுறுத்திய வேண்டிய அவசியமில்லை.

மட்டக்களப்பு மக்களை மடையர்கள் என்று நினைக்கின்றார்கள் இந்தப் பொதுஜன பெரமுன குழுவினர். இது மிகவும் வேதனையளிக்கக் கூடிய காரியம். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம் என்று தெரிவித்துள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அபாயம் நீங்கவில்லை!

**நாட்டை உலுப்பி வரும். கொரோனாப் பேரிடர் தொடர்பில் அரசு முக்கிய முடிவை எடுத்துள்ளது. நீண்டகாலம் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் ஊரடங்கு நாளை அதிகாலை 4 மணியுடன் விலக்கப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.**

**இது வரை காலமும் ஊரடங்கும் பொது முடக்கமும் நடைமுறையில் இருப்பதாகக் கூறப்பட்டது. ஆனால் 'ஊரடங்கு' என்ற சொல்லுக்கே அர்த்தமில்லாத வகையில்தான் அது நடைமுறைப்படுத்தப்பட்டது என்பது கண்கூடு.**

**ஒரு சில அரச, தனியார் நிறுவனங்கள் இயங்கவில்லை. பொதுப் போக்குவரத்து – பஸ், ரயில் சேவைகள் – நடைபெறவில்லை. பாடசாலைகள், தனியார் ரியூஷன் வகுப்புகள் நடைபெறவில்லை. திருமணம் போன்ற பொது நிகழ்வுகள், ஆலயத் திருவிழாக்கள், பொதுக் கொண்டாட்ட நிகழ்வுகள் நடைபெறவில்லை. சாதாரண வழக்குகளுக்காக நீதிமன்றங்கள் கூடவில்லை.**

**மற்றப்படி அனைத்து விடயங்களும் நடந்தன. மக்கள் வீதிகளில் கட்டுப்பாடின்றி நடமாடினர். எல்லாமுமே தாராளமாக நடந்தன.**

**நடைமுறையில் இருப்பதாகக் கூறப்படும் ஊரடங்கை நடைமுறைப்படுத்துவதற்காக காவல் துறையினர் களத்தில் இருந்தனர் என்ற தகவலே இல்லை.**

**கொரோனாத் தொற்று ஆரம்பத்தில் முன்னெடுக்கப்பட்ட பொதுமுடக்கத்தின் போது ஊரடங்கும், ஒழுங்காகக் கடைப்பிடிக்கப்பட்டது; மக்கள் நடமாட்டமும் கட்டுப்படுத்தப்பட்டது.**

**ஆனால் இம்முறை – இதுவரை – அப்படி இருக்கவில்லை.**

**சமூகத்தில் கணிசமானோருக்கு இரண்டு கட்ட தடுப்பூசிகளும் வழங்கியாயிற்று என்ற நம்பிக்கை காரணமாகவும் –**

**தொற்றாளர் எண்ணிக்கை, சாவு எண்ணிக்கை போன்றவை குறைந்து வருகின்றன என வெளியாகிய புள்ளிவிவரக் கணக்குகள் காரணமாகவும் –**

**கொரோனாத் தொற்றுப் பேரிடர் தொடர்பான மக்களின் அச்சம், பீதி கொஞ்சம், கொஞ்சமாக விலகத் தொடங்கிவிட்டது என்று கருதப்படுகின்றது.**

**கொரோனப் பரவலில் இருந்து தப்பமுடியாது, அதனுடன் வாழப் பழகிக் கொள்வது தவிர்க்க முடியாத கட்டாயம் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் பரவத் தொடங்கியதும் கூட பொதுமுடக்கம், ஊரடங்கு உத்தரவு போன்றவற்றை மக்கள் உதாசீனம் செய்ய முற்பட்டமைக்கு பின்புலமாக இருக்கக் கூடும்.**

**கொரேனாத் தொற்றுக்கு முகம் கொடுக்கக் கூடிய நிலைமைக்கு நாடு துணிவுடன் மேலெழுந்திருக்கின்றது என்பது உண்மைதான். ஆனால் அந்தப் பேரரக்கனின் ஆபத்து நீங்கி விட்டமை போன்ற ஓர் எண்ணம் மக்கள் மத்தியில் ஏற்பட்டிருக்கின்றமை மிக மோசமான நிலைமையாகும்.**

**கொரோனாப் பேரரக்கனின் தொற்றின் அடுத்த அலையும், புதிய பிறழ்வுகளும் ஆபத்தாக நாட்டைப் பீடிக்கும் அபாயம் இன்னும் சூழ்ந்துள்ளமையை மக்கள் மறக்கக் கூடாது. வரமுன் காக்கத் தவறுவோமோயானால் மீண்டும் ஒரு தடவை உயிரிழப்பை –பேரழிவுகளை – பெரும் பாதிப்புகளை – மீள முடக்கத்தை – நாம் எதிர்கொள்ள வேண்டியிருக்கும். அதை மறக்கா மல் இருப்பது நல்லது.**

# மன்னார் ஆயரின் ஆசீர்வாதத்துடனா ஊடகவியலாளர் அச்சுறுத்தப்பட்டார்?

## வவுனியா ஊடக சங்கங்கள் கேள்வி

பண்டிவிரிச்சான் பகுதியினைச் சேர்ந்த ஊடகவியலாளர் ஒருவர் அச்சுறுத்தப்பட்ட சம்பவம் மன்னார் ஆயரின் ஆசீர்வாதத்துடனா நடந்தது என்ற சந்தேகம் எழுவதாக வவுனியா ஊடக சங்கங்களின் பிரதிநிதிகள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

மன்னார், பண்டிவிரிச்சான் பகுதியைச் சேர்ந்த ஊடகவியலாளர் ரஞ்சன் ரவிக்குமார் அச்சுறுத்தப்பட்ட விடயம் தொடர்பாக வவுனியாவில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட வவுனியா ஊடக மையத்தின் செயலாளர் க.ஜனகதீபன், வவுனியா தமிழ் ஊடக சங்கத்தின் தலைவர் சு.வரதகுமார், வன்னி ஊடகவியலாளர் சங்கத்தின் பிரதிநிதி சனத்பிரியந்த உள்ளிட்ட ஊடக சங்க பிரதிநிதிகளே இவ்வாறு தெரிவித்தனர்.

அவர்கள் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் -

எமது ஊடக அமைப்புகளில் அங்கத்தவராக உள்ள ரஞ்சன் ரவிக்குமார் பங்குத்தந்தை ஒருவரால் அச்சுறுத்தப்பட்டிருக்கின்றார். மன்னார் கோவில் மோட்டைப் பகுதியில் அமைந்துள்ள விவசாய காணிதொடர்பாக அந்த பகுதியைச் சேர்ந்த விவசாயிகளுக்கும், பண்டிவிரிச்சான் பங்கு தந்தைக்கும் இடையில் அண்மையில் முரண்பாடு ஒன்று இடம்பெற்றது.

அந்த முரண்பாடு தொடர்ச்சியாக இடம்பெற்று வந்த சந்தர்ப்பத்தில் அங்கு கடமை நிமித்தம் சென்ற எமது ஊடகவியலாளர் அதனை காணொலியாக பதிவுசெய்து வெளியிட்டிருந்தார். அதனை வெளியிட்டு சில மணி நேரங்களிலேயே அன்றையதினம் குறித்த ஊடகவியலாளருக்கு தொலைபேசி அழைப்பை மேற்கொண்ட பெரியபண்டிவிரிச்சான் பங்குத் தந்தை, 'நாங்கள் உங்களை என்ன செய்கின்றோம் என்று பாருங்கள்' என்று கூறி அவரது உயிருக்கும், தொழிலுக்கும் அச்சுறுத்தல் விடுத்திருந்தார்.

அச்சுறுத்தல் விடுத்த அன்றையதினமே, குறித்த ஊடகவியலாளர் வீட்டில் இல்லாத நிலையில் அவரது குடும்பத்தினர் இருந்துள்ளனர். இதன்போது அவரது வீட்டைச் சுற்றி இனம் தெரியாத நபர்கள் நடமாடியதுடன், வீட்டின் மீதும் கற்களை எறிந்து தாக்குதல் நடத்தியுள்ளனர். இதன்போது அவரது மனைவியும் குழந்தைகளுமே வீட்டில் இருந்துள்ளனர். இது தொடர்பாக பாதிக்கப்பட்ட ஊடகவியலாளர் மடு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை வழங்கியிருந்தார். எனினும் அதன் பின்னரும் அந்த ஊடகவியலாளர் மீதான மறைமுகமான அச்சுறுத்தல்கள் தொடர்ந்த வண்ணமே உள்ளன.

# மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு; ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுப்பு!



மன்னார் பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவு நேற்று (புதன்கிழமை) காலை 10.30 மணியளவில் உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன் தலைமையில் இடம் பெற்ற நிலையில், மேற்படி தவிசாளர் தெரிவில் கலந்து கொண்டு செய்தி சேகரிக்க ஊடகவியலாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது.

மேலும் புதிய தவிசாளர் தெரிவில் கலந்து கொள்வதற்காக வருகை தந்த நாடாளுமன்ற உறுப்பினர்களான சாள்ஸ் நிர்மலநாதன் மற்றும் காதர் மஸ்தான் ஆகியோரையும் கலந்து கொள்ள பொலிஸார் அனுமதி மறுத்துள்ளனர்.

மன்னார் பிரதேச சபையை சுற்றி பொலிஸ் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டதோடு, பிரதேச சபையின் புதிய தவிசாளர் தெரிவில் கலந்து கொள்ளச் சென்ற மன்னார் பிரதேச சபை உறுப்பினர்கள் பொலிஸாரால் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு உள்ளே செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

மேலும் பிரதேச சபையின் பணியாளர்களும் சோதனையின் பின்னர் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

வடமாகாண ஆளுநரால் மன்னார் பிரதேச சபையின் தவிசாளர் எஸ்.எச்.எம்.முஜாகிர் தவிசாளர் மற்றும் உறுப்புரிமையில் இருந்து நீக்கப்பட்ட நிலையில் நேற்று உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிறைஞ்சன் தலைமையில் புதிய தவிசாளர் தெரிவு இடம் பெற்றமையும் குறிப்பிடத்தக்கது.

# நாட்டில் எரிபொருள் தட்டுப்பாடு இல்லை ரணில் விக்கிரமசிங்கவுக்கு அரசு பதில்!

நாட்டில் எரிபொருளுக்கு தட்டுப்பாடு இல்லை என அரசாங்கம் அறிவித்துள்ளது.

அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடக சந்திப்பில் இணை அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் ரமேஷ் பத்திரன இதனைத் தெரிவித்துள்ளார்.

தற்போது அமுலாக்கப்பட்டுள்ள தனிமைப் படுத்தல் ஊரடங்கு நீடிக்கப்பட்ட பின்னர், எரிபொருள் கொள்வனவுக்குத் தேவையான அந்நிய செலாவணி குறைவடைந்துள்ளதாக அண்மையில் நாடாளுமன்ற உறுப்பின் ரணில் விக்கிரமசிங்க குற்றஞ்சாட்டியிருந்தார்.

இவ்வாறு முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

# கொவிட் தடுப்பூசி அட்டைகள் வவுனியாவில் பரிசோதனை



வவுனியா நெடுங்கேணி பகுதியில் தடுப்பூசி அட்டைகள் பரிசோதிக்கப்பட்டு தடுப்பூசி பெற்றுக்கொள்ளாதவர்களுக்கு பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வவுனியா வடக்கு சுகாதார வைத்திய அதிகாரி வி.திலீபன் தலைமையில் , நேற்று (புதன்கிழமை) வவுனியா சுகாதார வைத்திய பணிமனையினர், நெடுங்கேணி பொலிஸாருடன் இணைந்து நெடுங்கேணி நகரில் மக்களின் தடுப்பூசி செலுத்திய அட்டைகளை பரிசோதனை செய்துள்ளார்கள்.

குறித்த தரப்பினரின் பரிசோதனை நடவடிக்கையில் கொரோனாத் தடுப்பூசி பெற்றுக் கொள்ளாதவர்கள் கொவிட் 19 நோய்க்கான ஆபத்தை கூடுதலாக கொண்டிருப்பவர்கள் என அடையாளப்படுத்தி அவர்களுக்கும், நெடுங்கேணி நகர வர்த்தக நிலைய ஊழியர்களிற்கும் பி.சி.ஆர். மற்றும் அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

எஸ்.டி. சிவநாயகம் நினைவுப் பகிர்வு

# தமிழ் ஊடகத்துறையின் ஜாம்பவான் எஸ்.டி.எஸ்.!

அங்கம் - 97

ந.வித்தியாதரன்

அருள் சத்தியநாதன் மூத்த ஊடகவியலாளர். தினபதி, சிந்தாமணிப் பண்ணையில் வளர்ந்தவர். நீண்ட காலமாக 'தினகரன்' பத்திரிகையில் பணியாற்றி வருகின்றார். சிவநாயகம் ஐயாவின் இரண்டாம் ஆண்டு நிறைவை ஒட்டி அவர் வரைந்த நினைவுப் பகிர்வு இது.

ஐயாவின் உண்மைத் திறனைப் படம் பிடித்துக் காட்டுகின்றது இக்கட்டுரை. அதை அப்படியே தருகிறேன்:-

எஸ்.டி.சிவநாயகத்தை கண்டவர்கள், பேசியவர்கள் என்றில்லை; அவரைக் காணாதவர்களும், அவருடன் பணிபுரியாதவர்களும் கூட அவர் மீது பக்தி கலந்த மரியாதை வைத்திருக்கிறார்கள் என்றால், அது அவருடைய சிறப்பையும் கீர்த்தியையும் வெளிப்படுத்துகிறது. ஏனெனில் அவருடைய ஆளுமை அத்தகையது.

இலங்கையில் எத்தனையோ பத்திரிகையாசிரியர்கள் இருக்கின்ற போதிலும் சிவநாயகத்தை சிறப்பித்துக் கூறுவதற்கான காரணங்கள் இருக்க வேண்டும் அல்லவா?

எஸ்.டி.சிவநாயகம் சுதந்திரன் இதழில் இருந்து வீரகேசரிக்கு வந்தவர். வீரகேசரியை விட்டு விலகி எம்.டி.குணசேன நிறுவனத்தார் ஆரம்பித்த தினபதி – சிந்தாமணி இதழ்களின் பிரதம ஆசிரியராகப் பொறுப்பேற்று அந்நிறுவனம் 1990 ஆம் ஆண்டு மூடப்படும் வரை அங்கு பணியாற்றியவர். சிந்தாமணி காலம் என சிறப்பித்துக் கூறப்படும் அளவுக்கு அப்பத்திரிகையை வளர்த்தெடுத்தவர்.

இக்காலப் பகுதியில் அவர் இவ்விரு பத்திரிகைகள் ஊடாகத் தமிழ்ப் பத்திரிகை உலகுக்கும், இலக்கிய உலகுக்கும் பொதுவாகச் சொன்னால் தமிழ் மொழி வளர்ச்சிக்கும் ஆற்றிய சேவை குறிப்பிடத்தக்கது.

இவர் பல தூய தமிழ்ப் பதங்களை அறிமுகம் செய்திருக்கிறார். 'நாடாளுமன்றம்', 'கணனி', 'ஆடரங்கு' எனப் பல தமிழ் பதங்களை அறிமுகம் செய்த சிவநாயகம், சுவையானதும் சிந்தனைக்கு விருந்தானதுமான பல தொடர் கட்டுரைகளை எழுதினார். கட்டுரைகள், பயணக் கட்டுரைகள் என்றால் தமிழக சஞ்சிகைகளைத்தான் நாட வேண்டும் என்ற நிலையை நீக்கி, சிந்தாமணி எப்போது வரும் எனக் காத்திருந்து கட்டுரைகளை ஆவலோடு படிக்கச் செய்யும் நிலையை உருவாக்கியவர் எஸ்.டி.சிவநாயகம்.

1968ஆம் ஆண்டு சென்னை மாநகரில் இரண்டாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு கோலாகலமாக நடைபெற்றது. அப்போதுதான் தமிழக ஆட்சியை முதல் தடவையாக அறிஞர் அண்ணாவின் தலைமையில் தி.மு. க. கைப்பற்றி இருந்தது. அண்ணாவும் அவரது தம்பிகளும் தமிழாராய்ச்சி மாநாட்டை அதி சிறப்பாக நடாத்திக் காட்ட வேண்டும் என்பதில் மும்முரமாக இருந்தனர். தி.மு.க. தனது வளர்ச்சிக்கும் அரசின் ஸ்திரத்துக்கும் இம் மாநாட்டை அரசியல் ரீதியாகப் பயன் படுத்திக் கொண்டது உண்மையானாலும், இப்படி ஒரு விழா தமிழுக்கு இனி எப்பொழுதுமில்லை எனச் சொல்லத்தக்கதாக இம்மாநாட்டுக்கான ஏற்பாடுகள் தமிழ் பேசும் நல்லுலகம் என்றென்றும் மறந்து விடாதபடிக்கு மேற்கொள்ளப்பட்டிருந்தன.


தமிழாராய்ச்சி மாநாட்டு நிகழ்வொன்றில் நாவலர் நெடுஞ்செழியன், முதலமைச்சர் சி.என்.அண்ணாத்துரை, நடிகர் திலகம் சிவாஜிகணேசன், எஸ்.டி.சிவநாயகம் ஐயா.


இலங்கையில் இருந்து பல பிரதிநிதிகள் இம்மாநாட்டில் கலந்து கொள்ளச் சென்றிருந்தனர். திரும்பி வந்து தொடர் கட்டுரைகளை எழுதவும் செய்தனர். பத்திரிகையாளர் என்ற வகையில் எஸ்.டி. சிவநாயகமும் இம்மாநாட்டில் கலந்து கொண்டார். திரும்பி வந்து சிந்தாமணியில் நீண்ட கட்டுரைத் தொடரை, 'பூரித்த தமிழகத்தில் பொலிவுற்ற செந்தமிழ்' என்ற மகுடத்தில் எழுதவும் செய்தார்.

இக்கட்டுரைத் தொடர் பெரியோர், சிறியோர், மாணவர் என்ற எந்த வித்தியாசமுமின்றிச் சகலரையும் கவர்ந்தது. சிந்தாமணி கையில் கிடைத்ததும் சிவநாயகத்தின் தொடரைத்தான் வாசகர்கள் முதல் வேலையாகப் படித்து முடித்தார்கள். அவர் எழுத்தில், நடையில் அப்படி ஒரு வீச்சும், ஈர்ப்பும் இருந்தமையே அதற்குக் காரணம். காரம், மணம், குணம் நிறைந்த ஒரு விருந்தை குழம்பு, கூட்டு, ரசம், வடை, பாயாசத்துடன் உண்டு ருசிப்பது மாதிரி அவரது எழுத்துக்கள் இருக்கும் என்றால் மிகையாகாது.



எவருக்கும் புரிகின்ற மாதிரி எளிமையாகவும், நகைச்சுவை, கேலி, கிண்டல் சேர்ந்ததாகவும் அதே சமயம் எடுத்துக் கொண்ட விடயத்தை ஆணித்தரமாகச் சொல்லும் நேர்த்தியையும் அவரது எழுத்துக்களில் காணலாம். பூரித்த தமிழகத்தில் பொலிவுற்ற செந்தமிழ் என்ற தொடர் முடிவடைந்த போது, இன்னும் தொடரக் கூடாதா என்ற ஏக்க உணர்வே வாசகர்களிடம் மேலோங்கியது. இவ்வளவு நேர்த்தியாக எழுதக் கூடிய பத்திரிகை ஆசிரியர்கள் அவர் காலத்திலும் இருக்க வில்லை அவருக்குப் பின்னரும் தோன்ற வில்லை .

பலருக்கு செய்தி எழுத வரும். கட்டுரை எழுத வராது. இல்லையேல் கட்டுரைகள் எழுதவரும் செய்தி எழுதவே மாட்டார்கள். சிவநாயகம் ஒரு முழுமையான பத்திரிகையாசிரியராக இருந்தார். அவருக்கு செய்தியும் வரும்; இலக்கியமும் கை கொடுக்கும்; சிருங்காரச் சுவை நன்றாகவே வரும்; ஆற்றொட்டமான நடையில் கட்டுரைகளையும் வரைவார்; கவிதைகளும் எழுதுவார். சரஸ்வதி கடாட்சம் அவருக்கு முழுமையாக இருந்தது.


அருள் சத்தியநாதன்

அவரைப் போன்ற எழுத்துத்துறை சகலகலா வல்லவரைக் காண்பது அரிது.

ஓர் எழுத்துலக மேதைக்கு இருக்க வேண்டிய கர்வம் அவரிடம் இருந்தது. இதனால் ஒரு சில பாதகமான விடயங்களும் ஏற்பட்டன. எஸ்.டி.சிவநாயகம் விழாக்களுக்குச் செல்வதில்லை .

விழாக்களுக்குத் தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார் எனக் கேள்விப்பட்டதில்லை .

வலியவந்து அவருக்குப் பொன்னாடை போர்த்தி கௌரவிக்க பலர் ஆசைப்பட்ட போதிலும், எந்தவொரு கௌரவத்தையும் அவர் ஏற்கவில்லை. இதனால் பலருக்கு அவர் புரியாப் புதிராகவும், அலட்சிய மனப்பான்மையும் செருக்கும் கொண்டவராகவும் தெரிந்ததில் வியப்பில்லை. ஆனால் உண்மையில் பழகுவதற்கு இனியவராகவும், எளிமையான பழக்கங்களைக் கொண்டவராகவுமே திகழ்ந்தார் என்பது அவருடன் பழகியவர்களுக்கே தெரியும்.

இன்றுள்ள நிலை என்ன? தாமே பொன்னாடை வாங்கி தமக்கே போர்த்திக் கொள்கின்ற – மேடையில் இருக்கையும், பொன்னாடையும் கௌரவமும் கிடைக்காதா எனத் திரிகின்ற படைப்பாளர்களை கொழும்பில் நிறையவே சந்திக்க முடிகின்றது.

எவர் வேண்டுமானாலும் எந்தப் பட்டங்களையும் சூட்டலாம் என்கின்ற இன்றைய நிலையில், ஜோதி, ஸ்ரீ, டாக்டர், பேராசிரியர் பட்டங்களைக் கேட்டு வாங்கி அவற்றைத் தமது விசிட்டிங் கார்ட்டுகளிலும் சேர்த்துக் கொள்கின்ற கேவலமான நிலையில் படைப்பாளர்கள் என்றும் பத்திரிகையாளர்கள் என்றும் தம்மை அழைத்துக் கொள்கிறவர்கள் உழன்று கொண்டிருப்பதைப் பார்க்கும்போது, எஸ்.டி.சிவநாயகம் கோபுரமாக உயர்ந்து நிற்பதைக் காண முடிகிறது.

அவர் சிந்தாமணிப் பண்ணை மூலமாக பல எழுத்தாளர்களையும் பத்திரிகையாளர்களையும் உருவாக்கித் தந்தார். ஆனால் பத்திரிகைத் துறை பயிற்சி வகுப்புகளில் விரிவுரையாற்ற விடுக்கப்பட்ட அழைப்புகளை அவர் ஏற்கவில்லை. வித்துவச் செருக்கு இதற்குக் காரணமாக இருந்திருக்கலாம். ஆனால், ஊடகத் துறை பயிற்சி நெறிகளில் கற்றுத் தேர்ந்து வெளியே வருபவர்களில் பலர் ஞான சூனியமாக இருப்பதைக் காணும்போது, ஊடகத்துறையில் மாணவர்களை பயிற்றுவிக்கும் சகல திறமைகளையும், தகுதியையும் கொண்டிருந்த எஸ்.டி. எஸ்., அக்காரியத்தை, அவர் நேசித்த தமிழ் ஊடகத்துறையின் வளர்ச்சியின் நிமித்தம் செய்யாது விட்டது அவர் செய்த தவறாகவே தெரிகிறது.

எழுத்துலக மன்னனாகத் திகழ்ந்த எஸ்.டி.எஸ்., ஊடகத்துறை தொடர்பாக ஒரு நூலையாவது எழுதி வெளியிட்டிருக்க வேண்டும். அவ்வாறு அவர் செய்திருந்தால், பத்திரிகைத்துறை மாணவர்களுக்கும் இளம் ஊடகவியலாளர்களுக்கும் அது வேதப்புத்தகமாக இருந்திருக்கும். அவர் இன்னுமொரு காரியத்தையும் செய்யத் தவறி இருந்தார். தனது பெயர் சொல்லும் வகையில் எந்தவொரு நூலையும் அவர் எழுதி வெளியிடவில்லை.

குறைந்தபட்சம் சிந்தாமணியில் தான் எழுதிய தமிழாராய்ச்சி மாநாடு கட்டுரைத் தொடரையாவது அறிஞர் அண்ணாவின் மறைவையடுத்து அவர் எழுதிய 'அறிஞர் அண்ணாவுடன் ஐந்து சந்திப்புக்கள்' என்ற சுவையான, அரிய பல தகவல்கள் அடங்கிய கட்டுரைத் தொடரையாவது நூலுருவில் கொண்டு வந்திருக்க வேண்டும். வாழ்வின் இறுதிக் காலத்திலாவது இக்காரியத்தை அவர் செய்திருக்க வேண்டும்.

இது சிவநாயகம் செய்த தவறாக இருக்கின்ற போதிலும் அவரது குடும்பத்தார் இத் தவறை நிவர்த்திக்கலாம். இந்த இரண்டு கட்டுரைத் தொகுதிகளையும் அவரது குடும்பத்தினர், இலங்கை எழுத்துலகுக்குச் செய்யும் சேவையாகக் கருதியாவது, நூலுருவில் கொண்டுவர வேண்டும். இந்த யோசனையை அவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும்.

எஸ்.டி. சிவநாயகம் பல திறமையான பத்திரிகையாளர்களை உருவாக்கினார் என்றாலும் என்றுமே அவர் அவர்களுக்கு நேரிடையாகப் பயிற்சிஅளிக்கவில்லை. அவருக்குக் கீழே வேலை செய்வதே ஒரு அனுபவம்தான்; ஒரு பயிற்சிதான்.

(08ஆம் பக்கம் பார்க்க)



- செல்லத்துரை ரவீந்திரன் -

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘இனப்படுகொலை’, ‘இனச்சுத்திகரிப்பு’ ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

## அங்கம் - 146

### 383.மகாநாட்டில் நடந்தவை என்ன?

தனித் தமிழீழம் ஒரு நீதியான கௌரவமான தீர்வாக தமிழ்மக்களுக்கு அமையும் ஆகவே அதற்கு ஆதரவாக




பல கருத்துக்களும் உதாரணங்களும் வழிமுறைகளும் முன்வைக்கப்பட்டன. தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படுகிற அநியாயங்களுக்கு அது ஒன்று தான் அவர்களை கௌரவமாக வாழ வழி சமைக்கும் என




மகா நாட்டில் பங்குபற்றியோரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அவர்கள் இரண்டு தீர்மானங்களை நிறைவேற்றினார்கள்.

முதலாவது தீர்மானம், வட்டுக்கோட்டை தீர்மானம் போன்று 1619 ஆம் ஆண்டு போர்த்துக்கீசர் வரும் வரை தனியரசாக இருந்ததிலிருந்து சுதந்திரம் பெற்ற நாளிலிருந்து நடந்தவற்றைப் பட்டியலிட்டு, உலகத் தமிழரெல்லோரும் ஒன்றிணைந்து ஈழத்தமிழ் மக்களின் போராட்டத்தில் இணைந்து அவர்களுக்கு நீதியும் சமாதானமும் பாதுகாப்பும் பெறுவதற்கு உதவுமாறு அறைகூவல் விடப்பட்டது. அங்கு ஆதரவுக்காக பங்குபற்றியிருந்த இந்திய நாட்டுப் பிரஜைகளுக்கும், தமிழ்நாட்டின் பல அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளுக்கும், மசாசூட்ஸ் மாநில அரசாங்கத்துக்கும், பல சர்வதேச மனித உரிமை அமைப்புக்களும் நன்றி தெரிவித்து, அவர்களுக்கும் சர்வதேச நாடுகளுக்கும் ஈழ தமிழ் தேசத்தின் மனித உரிமைகள் மதிக்கப்படுவதற்கும் அவர்களது சுயநிர்ணய உரிமை பாதுகாக்கப்படுவதற்கும் ஏதுவாக சர்வதேசத்துக்கு பரப்புரை செய்ய தமிழீழ விடுதலை சபை (Tamil Eelam Liberation Council) அமைக்கப்பட அதனோடு தமிழீழத்துக்கு ஆதரவாக யாவரும் ஒன்றிணைந்து தமிழீழம் என்ற புதிய தேசம் உருவாக உழைக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது.

"Appeal to the nations of the world and the international community to ensure that the Eelam Tamil Nation is not denied fundamental human rights including the right of self determination and resolve to set up a Tamil Eelam Liberation Council to lobby the international community to coordinate the activities of all groups committed to the idea of Tamil Eelam and to usher the birth of the new nation"

### 384.அப்படியாக அமைக்கப்பட்ட தமிழீழ சபை ஏதும் தீர்மானங்களை எடுத்ததா?

மகாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் தமிழீழ சபைக்குப் பாரப்படுத்தப்பட்டது. அந்த சபை இப்படியான ஒரு மகாநாடு முதல் தடவையாக பல நாடுகளிலிருந்தும் பிரதிநிதிகளின் பங்குபற்றலில் ஈழத்தமிழரின் எதிர்காலம் குறித்து தீர்மானங்கள் எடுத்ததைக் கணக்கெடுத்து, தமிழர் விடுதலை சபை நடைபெற்ற பல சம்பவங்களை ஆராய்ந்து அன்றிலிருந்து ஒரு வருடத் துக்குள் இடைக்கால தமிழீழ அரசை நிறுவ ஏற்பாடுகள் செய்யும் என்ற தீர்மானத்தை நிறைவேற்றியது.

"This world convention taking into full consideration, the totality of all relevant developments, resolves and decides to form an interim provisional government of Tamil Eelam within one year from today"

### 385.இந்த தமிழீழ விடுதலை சபையில் யார் அங்கத்துவம் பெற்றனர்? எந்தச் சம்பவங்களைக் கணக்கெடுத்தார்கள்?

அதில் ஐந்து பேர் இடம்பெற்றனர். டாக்டர் டபிள்யூ. வி.பஞ்சாட்சரம், எட்வேர்ட் பெனடிக்ற், கே.ஜெகதீசன், ரி.சிறிதரன், என்.விஜயானந்தன் ஆகியோர். அந்த சபை பின்னால் டாக்டர் எஸ்.நவரத்தினம், கே.வைகுந்தவாசன், திருமதி பி.பேரின்பநாயகம் என்பவர்களைத் தம் மோடு சேர்த்துக் கொண்டார்கள். அவர்கள் கணக்கெடுத்து ஆராய்ந்த



சம்பவங்கள்:-

★வைகுந்தவாசன் 1978 இல் ஐ.நா. அரங்கில் தமிழ் மக்களுக்குரிய சுயநிர்ணய உரிமை பற்றிப் பேசி சர்வதேசத்துக்கு அறிவித்தமை.

★ மே 1979 இல் நிறைவேற்றப்பட்ட மசாசூட்ஸ் தீர்மானம்.

★ ஓகஸ்ட் 1981 இல் தமிழ் நாட்டின் சட்டசபையில் நிறைவேற்றப்பட்ட ஏகமனதான தீர்மானம்.

★ 14 ஜனவரி 1982 இல் தமிழ் மக்கள் பிரதிநிதிகள் ஐ.நா. மன்றின் முன் செயல்படுத்திய தனித் தமிழ் ஈழ பிரகடனம்.

★ அதேநாளில் அந்தத் தீர்மானத்துக்கு ஆதரவாகத் தனித்தமிழ் ஈழத்தை ஏற்று ஈரோடு (தமிழ் நாடு) மலேசியாவில் செய்யப்பட்ட தீர்மானங்கள்.

★ தமிழீழ விடுதலை முன்னணி (TELF) இனால் ஒழுங்கு செய்யப்பட்டு 26 ஏப்ரல் 1982 யாழ்ப்பாணத்தில் சுதந்திர தமிழீழப் பிரகடத்தினை ஏற்று நடத்திய மகாநாடுகள்.

★ தொடர்ந்தும் இளைஞர்கள் தமிழ்நட்டிலும் ஶ்ரீலங்காவிலும் கைது செய்யப்படுவது தமிழ் ஈழம் அமைக்கப்படுவதை தவிர்க்க முடியாததாக ஆக்குகிறது.

- என்பவை.

அத்தோடு அன்று சம்பிரதாய பூர்வமாக தமிழீழ கொடியும் மகாநாட்டில் ஏற்றிவைக்கப்பட்டது.

(வளரும்)



# மதகுருமார்கள் வெறுப்பூட்டும் பேச்சுகளை பேசுவதற்கு அனுசரணை வழங்குவதை அரசு தவிர்க்க வேண்டும்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

மதகுருமார்கள் வெறுப்பூட்டுகின்ற பேச்சுக்களை பேசுவதற்கு தூண்டப்படுவதும், செயற்படுவதும் சம்பந்தமாக அவர்களைத் தண்டிப்பது என்பது ஒருபுறம் இருக்க, அவர்களுக்கான அனுசரணை வழங்குவதை இந்த அரசாங்கம் தவிர்த்துக்கொள்வதை வெளிப்படையாகவே இந்த விடயத்தில் காண்பித்தல் வேண்டும். அரசு சார்பு ஊடகங்கள் தான் இவற்றுக்கான அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன என ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

கட்சியின் 'தாருஸ்ஸலாம்' தலைமையகத்தில், இலங்கை வந்துள்ள, ஐரோப்பிய ஒன்றிய உயர்மட்டத் தூதுக் குழுவினரைச் சந்தித்த பின்னர் ஊடகவியலாளர் மத்தியில் அவர் இதனைக் கூறினார். முஸ்லிம் காங்கிரஸ் செயலாளர் ஜனாதிபதி சட்டத்தரணி நிசாம் காரியப்பரும் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினார். முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஹக்கீம் மேலும் தெரிவித்தவை வருமாறு –

இந்த நாட்டில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற மிக மோசமான மனித உரிமைகள் மீறல்கள் சம்பந்தமாக இன்று என்னை சந்திக்க வருகை தந்திருந்த ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுக்குழு, என்னுடைய தரப்பிலிருந்து கருத்துக்களை கேட்டறிந்துக் கொள்ள விரும்பினார்கள்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தைப் பயன்படுத்துவதன் மூலம் அரசியல் ரீதியாகப் பலரை பழிவாங்குவதற்கான முயற்சி மிகவும் வெளிப்படையாகவே இடம்பெறுகின்றமை தொடர்பில் பல விடயங்களைக் கதைத்திருக்கின்றோம்.

குறிப்பாக, சட்டத்தரணி ஹிஜாஸ் ஹிஸ்புல்லாஹ் போன்றவர்களை தகுந்த காரணங்கள் இன்றி, சோடிக்கப்பட்ட காரணங்களைக் காட்டி கிட்டத்தட்ட ஒன்றரை வருட காலம் இந்த பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் மூலம் , இதுவரையில் எவரையுமே இவ்வாறு தடுத்து வைக்கப்படாத நிலையில், தடுத்து வைத்திருக்கின்றமை என்பது வேண்டுமென்றே பழிவாங்கும் முயற்சி என ஐரோப்பிய ஒன்றியத்தின் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருக்கின்ற பிரேரணையிலும் குறிப்பிடப்பட்டிருப்பதை சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

மிக விரைவில் அவருக்கு பிணை வழங்கப்பட்டு அதற்குப் பின்னால் அவருடைய வழக்கை தேவையானால் கொண்டு செல்லுமாறு சுட்டிக்காட்டி இருக்கின்றோம்.

இதுபோன்று நிறைய இளைஞர்கள், முதியவர்கள் மற்றும் பெண்கள் கூட போதிய காரணங்கள் இன்றி, பயங்கரவாதத்தோடு சம்பந்தப்பட்டனர் எனச் சொல்லி தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றார்கள். உரிய குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்படாதவிடுத்து அவர்களை விடுவிப்பதற்கான அவசர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டிய அவசியத்தை நாங்கள் வலியுறுத்தியிருக்கின்றோம்.

முஸ்லிம் சமய விவகாரங்கள் சம்பந்தமாக குறிப்பாக, விவாகம், விவாகரத்து சம்பந்தமான சட்டத்தில் கொண்டுவரப்பட இருக்கின்ற திருத்தங்கள் தொடர்பான சர்ச்சை சமூகத்திலிருந்து தீர்க்கப்பட்டிருந்தது.

இருந்த போதிலும், மீறி இந்த அரசாங்கம் முஸ்லிம்களுக்கு இருக்கின்ற தனியான சட்ட நடைமுறையை வேண்டுமென்றே தலையிட்டு இல்லாமல் செய்கின்ற முயற்சிகளில் ஈடுபட்டிருக்கின்ற விவகாரத்தில் சில மாற்றங்கள் கொண்டுவர வேண்டும் என்பதை நாங்கள் மிகத் தெளிவாக வலியுறுத்துகின்றோம்.

இதற்காக நீதி அமைச்சரோடு இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடியுள்ளோம். தேவையற்ற முறையில் சிறுபான்மையினரின் உரிமைகளை அரசாங்கம் பறிக்கின்ற விடயமாக இவை மாறிவிட இடமளிக்கக் கூடாது என்ற விடயத்தையும் ஐரோப்பிய ஒன்றியத்திடம் மிகத் தெளிவாக முன்வைத்திருக்கின்றோம்.

இதேவேளை, பெண்கள் சம்பந்தமான உரிமைகளை நாங்கள் வழங்குவதற்கான ஏற்பாடுகளிலும் உடன்பாடுகளை கண்டிருக்கின்றோம் என்பதையும் அவர்களிடத்தில் கூறியிருக்கின்றோம்.

மேலும், இந்த நாட்டில் கருத்து உரிமை சுதந்திரத்துக்காகவும், ஆர்ப்பாட்டங்களிலும், அரசுக்கு எதிராக விரோத நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை வேண்டுமென்று கைது செய்து தடுப்புக் காவலில் வைத்து அவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளை இந்த ஆட்சியாளர்கள் செய்து கொண்டு, தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காகவே அவசரகால சட்டத்தைப் பிரயோகிக்க ஆரம்பித்திருக்கின்றனர். இதற்கு மேலும் இந்த அவசரகாலச் சட்டம் நீடிக்க விடப்படக் கூடாது என்பது தொடர்பாக நாங்கள் கூறியிருக்கின்றோம்.

மக்களுக்கு இருக்கின்ற இந்தப் பிரச்சினைகள் தொடர்பாக விவாதித்துக்கொண்டிருக்கும் நிலையில் வெறுக்கத்தக்க பேச்சுக்களைப் பேசுகின்ற மதகுருமார்களின் செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இந்த அரசாங்கம் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளாது இருப்பது விசனத்துக்குரியது என்றும் நாங்கள் சுட்டிக் காட்டி இருக்கின்றோம்.

**கேள்வி:-** இலங்கைக்கு எதிராகப் பொருளாதாரத் தடைகள் விதிக்கப்படவுள்ள விவகாரம் தொடர்பில் கூற முடியுமா?

**பதில்:-** உண்மையில், ஜி.எஸ்.பி.சலுகைகள் சம்பந்தமான விவகாரத்தில், இந்த நாட்டில் மனித உரிமை மீறல்கள் இடம்பெறுவதைத் தவிர்ப்பதற்கு அரசாங்கம் மேற்கொள்ளவுள்ள நடவடிக்கைகளைப் பொறுத்துத் தான் ஜி.எஸ்.பி.சலுகைகள் நீடிக்கப்படலாம் என்ற ஒரு நிலைவரம் இருக்கின்றது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் எதிர்க்கட்சியினரும், நேர்மையான ஜனநாயகத்தில் கரிசனையுள்ளவர்கள் என்றதனடிப்படையில், அரசாங்கத்தின் அண்மைக்கால நடவடிக்கைகள் யாவும் திருப்திகரமாக இல்லை என எங்களுடைய முறைப்பாடுகளை நாங்கள் செய்திருக்கின்றோம்.

எனவே அது சம்பந்தமான மாற்று நடவடிக்கைகளை ஐரோப்பிய ஒன்றியம் மேற்கொள்வதன் மூலம் இந்த அரசாங்கத்தை சரியான பாதையில் கொண்டு செல்ல முயற்சிக்கலாம் என ஒன்றியத்திடம் கோரியிருக்கின்றோம்.

**கேள்வி:-** மதகுருமாரின் வெறுப்பூட்டும் பேச்சுக்களுக்கு எதிராக முறைப்பாடுகள் எதுவும் செய்துள்ளீர்களா?

**பதில்:-** மதகுருமார்கள் வெறுப்பூட்டுகின்ற பேச்சுக்களை பேசுவதற்கு தூண்டப்படுவதும், செயற்படுவதும் சம்பந்தமாக அவர்களைத் தண்டிப்பது என்பது ஒருபுறம் இருக்க, அவர்களுக்கான அனுசரணை வழங்குவதை இந்த அரசாங்கம் தவிர்த்துக்கொள்வதை வெளிப்படையாகவே இந்த விடயத்தில் காண்பித்தல் வேண்டும். அரசு சார்பு ஊடகங்கள் தான் இவற்றுக்கான அவகாசத்தை ஏற்படுத்திக் கொடுக்கின்றன.

அதேநேரம் அரச உளவுத்துறைக்கும், அரசாங்க மேலிடத்துக்கும் சார்பாகத் தன்னுடைய பேச்சுக்களை பேசுவதன் மூலம் பலத்த சந்தேகம் நிலவுகின்றது. இந்த நடவடிக்கையின் பின்னால் அரசாங்கம் செயற்படுவதாக மிகத் தெளிவாகவே புலப்படுகின்றது. அரசாங்கம் வெளிப்படைத்தன்மையோடு நடந்துகொள்ள வேண்டிய அவசியம் இருக்கின்றது.

என்னைப் பொறுத்தமட்டில் எந்த மதகுருமாரையும் கைது செய்வது சம்பந்தமான விவகாரத்தில் நான் அதிகமாகப் பேசப் போவதில்லை. ஏனென்றால், பௌத்த தர்மத்தில் இருக்கின்ற அடிப்படை விடயங்களை மீறி நடந்துவிடுகின்ற மதகுருமார்கள் சம்பந்தமாக எங்களுடைய கவலையையும், விசனத்தையும் தான் கொண்டிருக்கின்றோமே தவிர, அவர்கள் தங்களுடைய போக்குகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்பதையே நாங்



கள் வலியுறுத்துகின்றோம்.

எனவே இதை வைத்துக்கொண்டு முஸ்லிம்களைத் தூண்டிவிட்டு ,அவர்களை மென்மேலும் கஷ்டத்திலும், பிரச்சினைகளிலும் மாற்றிவிடுகின்ற முயற்சிகளை நாங்களாகவே வலியப்போய் மாட்டிக்கொள்ள வேண்டுமென்ற அவசியம் இல்லை என்பதே என்னுடைய நிலைப்பாடாகும்.

**கேள்வி :** ஜி.எஸ்.பி.சலுகைகள் எங்களுக்கு கிட்டுமா?

**பதில் :** அது எங்களுக்கு மீள கிடைப்பதும், இல்லாமல் போவதும் இந்த அரசாங்கத்தின் கைகளில் தான் உள்ளது. அரசாங்கம் தான்தோன்றித்தனமாக மனித உரிகைளை மீறி மிக மோசமாக சட்டங்களை துஷ்பிரயோகம் செய்வதன் மூலம் நாட்டில் சட்டத்தின் ஆட்சி கேள்விக்குட்படுத்தப்படும் போது இந்தச் சலுகைகள் கூட சந்தேகத்திற்கிடமான நிலைமைக்குத்தான் தள்ளப்படும்.

எனவே, ஐரோப்பிய ஒன்றியம் இந்த விவகாரங்களில் மிகத் தீவிரமாக கண்காணித்துக் கொண்டிருக்கின்றது. அதன் ஓர் அம்சமாகத்தான் இன்று எங்களைப் போன்ற அரசியற் கட்சிகளின் அபிப்பிராயங்களை கோரியிருக்கின்றார்கள். மிகத் தெளிவாக இந்த அரசாங்கத்தின் நடவடிக்கைகள் திருப்திகரமாக இல்லை என்பது குறித்த எங்களுடைய பலத்த விரோதத்தை தெரிவித்திருக்கின்றோம்.

**கேள்வி:-** எல்.என்.ஜி. மின்சக்தி ஒப்பந்தம் சம்பந்தமாக என்ன கூற நினைக்கின்றீர்கள்?

**பதில்:-** இந்த ஒப்பந்தம் மிக இரகசியமாக இரவோடு இரவாக யாருக்கும் தெரியாமல் அமைச்சரவை பத்திரத்தின் மூலம் நிறைவேற்றப்பட்டிருக்கின்றது என்பது பலத்த சந்தேகத்தை ஏற்படுத்தியிருக்கின்றது. இவ்வாறான விடயங்களில் இதற்கு முன்னரும் எம்.சி.சி. ஒப்பந்தத்தையெல்லாம் பொய்யான காரணங்களை சொல்லி நாட்டின் தேர்தலை வெல்வதற்காக பிரசாரம் செய்த இந்த அரசாங்கம் இன்று பின்கதவால் சென்று அமெரிக்க முதலீட்டாளர்களை அழைத்து வந்து பின் கதவாலேயே முதலீட்டு வாய்ப்புக்களை வழங்குகின்ற முயற்சியின் பின்னால் பெரிய ஊழல் இருப்பதற்கான சந்தேகம் மக்களுக்கு மத்தியில் எழுந்திருக்கின்றது. இதற்கு பதில் கூற வேண்டிய கடமை அரசாங்கத்துக்கு இருக்கின்றது.

**கேள்வி:-** அரிசி விலை நிர்ணயம் சம்பந்தமாக வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் என்ன கூற விரும்புகின்றீர்கள்?

**பதில்:-** ஒவ்வொருநாளும் வெளியிடப்படும் வர்த்தமானி அறிவித்தலின் மூலம் மக்களுக்கு எந்தப் பிரயோசனமும் கிடைத்தபாடு இல்லை. வர்த்தமானி எதைச் சொன்னாலும் அதைக் கட்டுப்பாட்டு விலைக்கு எந்தப் பொருளையும், எங்கும் வாங்கக் கிடைப்பதும் இல்லை. கறுப்புச் சந்தையில் தான் மக்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கக் கூடியவாறு விலைகளும் கூடிச் செல்கின்றன.

எனவே மக்களுடைய அடிப்படைத் தேவையான பொருள்களில் விலைவாசியைக் கட்டுப்படுத்தும் முயற்சியில் இந்த அரசாங்கம் முழுமையாக தோற்றுப் போய் விட்டது. தன்னுடைய இயலாமையை மறைப்பதற்காக அடிக்கடி வர்த்தமானி அறிவித்தல்களை வெளியிடுவதன் மூலம் மக்களுடைய அதிருப்தியிலிருந்து இந்த அரசாங்கம் ஒருபோதும் மீள முடியாது என்பதே மிகத் தெளிவான விடயமாகும்.

# நாவற்குழியில் வீடு புகுந்து தாக்குதல் தந்தை மற்றும் இரு மகன்கள் காயம்!

நாவற்குழி பகுதியில் வன்முறைக் கும்பல் ஒன்று வீடு புகுந்து வீட்டில் இருந்த தந்தை மற்றும் இரு மகன்கள் மீது தாக்குதல் மேற்கொண்டுள்ளதுடன் , வீட்டின் மீதும் தாக்குதல் மேற்கொண்டு விட்டு தப்பிச் சென்றுள்ளது.

நாவற்குழி ஜே/294 கிராம சேவையாளர் பிரிவில் உள்ள வீடொன்றினில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு அத்து மீறி நுழைந்த வன்முறைக் கும்பல், வீட்டின் ஜன்னல்கள், கதவுகளை உடைத்து அட்டகாசம் புரிந்ததுடன், வீட்டில் இருந்த தந்தை மற்றும் மகன்கள் இருவர் மீதும் சரமாரியாக தாக்குதல் நடாத்தி விட்டு தப்பி சென்றுள்ளனர்.



தாக்குதலில் காயமடைந்த தந்தை , இரு மகன்களையும் , அயலவர்கள் மீட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்த்துள்ளனர். இது தொடர்பாக சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# முல்லை மாவட்ட செயலருக்கு கொரோனாத் தொற்று உறுதி!

முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் க.விமலநாதனுக்கு, கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

விமலநாதனுக்கு கொரோனாத் தொற்று அறிகுறிகள் காணப்பட்ட நிலையில், பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்ட நிலையில், அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்து, அவர், கொரோனாத் தொற்றுக்கான சிகிச்சையை பெற்று வருகிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, காய்ச்சல் ஏற்பட்டமையைத் தொடர்ந்து கடந்த ஆறு நாள்களாக சுயதனிமைப்படுத்தலில் உள்ளமையை முல்லைத்தீவு மாவட்ட செயலாளர் விமலநாதன் உறுதிப்படுத்தினார்.

# ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தவேண்டாம் ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகளிடம் எதிர்க்கட்சி கோரிக்கை

இலங்கைக்கு வருகைதந்திருக்கும் ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகள் குழுவை கடந்த செவ்வாய்க்கிழமை சந்தித்துக் கலந்துரையாடிய சஜித் பிரேமதாஸ தலைமையிலான எதிர்க்கட்சிப் பிரதிநிதிகள், இலங்கைக்கு வழங்கப்பட்டுவரும் ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தவேண்டாம் என்று கேட்டுக்கொண்டனர்.

மாறாக அந்த வரிச்சலுகையைத் தொடர்ந்து பெறுவதற்கான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகம்சார் கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான அழுத்தங்களை அரசாங்கத்திற்கு வழங்குமாறும் அவர்கள் ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகளிடம் வலியுறுத்தியுள்ளனர்.

இலங்கைக்கு ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைத் தொடர்ந்து வழங்குவது தொடர்பான மதிப்பீடுகளை மேற்கொள்வதற்காக நாட்டை வந்தடைந்திருக்கும் ஐவரடங்கிய ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகள் குழுவினர், தமது மதிப்பீட்டுப்பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதிநிதிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித்தலைவர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான லக்ஷ்மன் கிரியெல்ல மற்றும் ஹர்ஷ டி சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதன்போது ஜனநாயகம், மனித உரிமைகள், சிறைக்கைதிகளின் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதுடன் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இலங்கைக்கும் இடையிலான நீண்டகாலத் தொடர்பு பற்றியும் நினைவுகூரப்பட்டது.

இந்தச் சந்திப்பின்போது பேசப்பட்ட விடயங்கள் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வாவிடம் வினவிபோது -

ஏற்கனவே வாக்குறுதியளிக்கப்பட்டவாறு பயங்கரவாதத்தடைச்சட்டத்தில் உரியவாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்படவேண்டியதன் அவசியம் தொடர்பில் இதன்போது வலியுறுத்தப்பட்டது. அதன் அவசியம் தொடர்பில் ஏற்கனவே லக்ஷ்மன் கிரியெல்ல நாடாளுமன்றத்தில் சுட்டிக்காட்டிப்பேசியுள்ளமை தொடர்பாகவும் நாம் ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளிடம் எடுத்துரைத்தோம்.

அத்தோடு இலங்கைக்கு வழங்கிவருகின்ற ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நிறுத்தவேண்டாம் என்று சஜித் பிரேமதாஸ ஐரோப்பிய ஒன்றியப்பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டார். இதன்மூலம் நாட்டுமக்கள் வேலை வாய்ப்பைப் பெற்றிருப்பதுடன், தற்போதைய டொலர் பற்றாக்குறை நிலைவரத்தில் இந்த வரிச்சலுகை மூலமான ஏற்றுமதிகள் நாட்டுக்குப் பெரிதும் பயனுள்ளதாக அமையும் என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

இந்த வரிச்சலுகையை ரத்துச்செய்வதால் நாட்டு மக்களே பாதிக்கப்படுவர். ஆகவே, ஜீ.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகையைப் பெறுவதற்கு அவசியமான மனித உரிமைகள் மற்றும் ஜனநாயகத்தைப் பாதுகாத்தல் உள்ளிட்ட கடப்பாடுகளைப் பூர்த்திசெய்வதற்கான அழுத்தங்களை அரசாங்கத்துக்கு வழங்குமாறும் ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகளிடம் கேட்டுக்கொண்டோம் என்று குறிப்பிட்டார்.

## தமிழ் ஊடகத்துறையின் ...

(05ஆம் பக்கத் தொடர்ச்சி)

சிவநாயகத்தாருக்கு எப்போதாவது ஒரு முறையே கோபம் வரும். ஏனெனில் ஒருவரைப் பார்த்து அவரது திறமையைத் துல்லியமாக எடை போடக் கூடிய சக்தி அவரிடமிருந்தது. நிர்வாகத் திறமை மிக்க அவர், தான் அமுல் செய்திருந்த கண்டிப்பான விதிமுறைகளின் மூலமே தனக்குக் கீழ் பணியாற்ற வந்தவர்களைச் சிறந்த பத்திரிகையாளர்களாக வளர்த்து எடுத்தாரே தவிர, வகுப்புகள் நடத்தியோ விரிவுரைகள் நிகழ்த்தியோ அல்ல. எப்படி ஒரு சிற்பியையோ அல்லது கவிஞனையோ பயிற்சி மூலமும் விரிவுரைகள் மூலமும் உருவாக்க முடியாதோ அதே போல ஒரு பத்திரிகையாளரை அல்லது எழுத்தாளரையும் உருவாக்க முடியாது.

இயல்பாக ஒருவரிடம் இருக்கக் கூடிய திறமைகளையே வளர்த்து, கூர்மைப்படுத்த முடியும் என்பது இவரது கருத்தாக இருந்தது. ஊடகத்துறை டிப்ளோமா அல்லது பயிற்சிச் சான்றிதழ் வைத்திருப்பதால் மட்டும் ஒருவர் அத்துறையில் சிறந்து விளங்கிவிட முடியாது; அது தெரிவு செய்யப்படுவதற்கான முதல் தகுதியாகாது என்பது அவரது உறுதியான எண்ணமாக இருந்தது.

எஸ்.டி.சிவநாயகம், மறைந்த குமுதம் ஆசிரியர் அண்ணாமலையைப் போல தன்னைப் பிரபலப்படுத்திக் கொள்ளாத உத்தியின் மூலம் பிரபலம் பெற்றவர். பல ஆண்டுகளாகவே அவர் கலந்து கொள்ளும் பொது நிகழ்ச்சி சத்ய சாயி பாபா பஜனைக் கூட்டங்களாகவே இருந்தன. சுயமரியாதை இயக்கத்தால் ஈர்க்கப்பட்ட இளைஞராக இலக்கியத்துறையில் பிரவேசம் செய்த எஸ். டி. எஸ்., அறிஞர் அண்ணாவின் தி.மு.க. எழுச்சி அலையில் அள்ளுண்டு சென்றவர். இவ்வாறாக எஸ்.டி. எஸ். பிற்காலத்தில் சாயி பக்தராக மாறினார்.

இது எப்படி சாத்தியமாயிற்று என்ற கேள்விக்கு அவர் எப்போதும் புன்சிரிப்பையே பதிலாகத் தருவது வழக்கம்.

சுதந்திரன் பத்திரிகையில் இருந்து விலகி வந்ததாலோ என்னவோ தமிழரசுக் கட் சியின் மீது அவருக்கு அரசியல் ரீதியான கோபம் இருந்தது. பிற்காலத்தில் அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் அனுதாபியாக அவர் தன்னைக்காட்டிக் கொண்டார். இதைத் தவிர தீவிர அரசியல் சார்பு தன்மை எதையும் அவர் கொண்டிருக்கவில்லை.

இதனால் எந்தவொரு அரசியல் கட்சிக்கும் அல்லது அரசியல்வாதிகளுக்கும் அடிபணியாமல், அவர்களது செல்வாக்குக்கு இரையாகித் தனது பத்திரிகை சுதந்திரத்தை இழக்காமல் அவரால் செயல்பட முடிந்தது.

எஸ்.டி.சிவநாயகம் ஒரு பத்திரிகையாளர், படைப்பாளர் என்ற வகையில் மிகவும் உயர்ந்த நிலையில் ஏனையோரால் அண்ணாந்து மாத்திரமே பார்க்கப்பட வேண்டிய நிலையில் உள்ளவர்.

அரசியல் சேற்றில் சிக்கி மலினப்பட்டுக் கிடக்கும் இன்றைய தமிழ்ப் பத்திரிகை உலகம், அரசியலால் பாதிக்கப்படாத நிலையில் தன்னையும் தனக்குக் கீழ் இருந்தவர்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொண்ட எஸ்.டி.சிவநாயகத்தாரை மிக மிக அண்ணாந்துதான் பார்க்க வேண்டும்.

(வளரும்)

## ஊடக சுதந்திரத்துக்கு எதிரான அச்சுறுத்தல்

சஜித் பிரேமதாஸ கண்டனம்



ஊடக சுதந்திரத்திற்கு எதிரான அச்சுறுத்தலுக்கு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கண்டனம் வெளியிட்டுள்ளார்.

கடந்த நாள்களில் சதொச நிறுவனத்தில் ஏற்பட்ட மோசடி சம்பவங்களை மேற்கோள் காட்டி 'லங்காதீப' மற்றும் 'திவயின' பத்திரிகைகள் பல்வேறு செய்திகளை பதிவிட்டிருந்தன.

இந்த செய்திகளின் உண்மைத்தன்மை தொடர்பில் ஆராய்வதற்காக ஆசிரியர் ஊடக நிறுவனத்தின் ஊழியர்களுக்கு குற்றப் புலனாய்வு பிரிவு அழைப்பு விடுத்தது.

இந்நிலையில் அரசமைப்பின் பிரிவு 14 (1) பேச்சு மற்றும் கருத்து சுதந்திரத்தை தெளிவாகக் காட்டுவதை சுட்டிக்காட்டிய சஜித் பிரேமதாஸ, ஜனநாயகத்தை மதிக்கும் ஒரு சமூகத்தில் ஊடகங்கள் மீதான இத்தகைய மிரட்டல் ஏற்றுக்கொள்ள முடியாதது எனக் கூறினார்.

நாட்டில் ஊழல் மற்றும் மோசடிகளை அம்பலப்படுத்துவது ஊடகங்களின் பொறுப்பாகும், தங்கள் பொறுப்புகளைச் செய்யும் பத்திரிகையாளர்களை சி.ஐ.டி. விசாரணைக்கு அழைக்கவோ மிரட்டவோ யாருக்கும் உரிமை இல்லை என்று குறிப்பிட்டார்.

## வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக எந்த முடிவும் இல்லை

வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பாக அரசாங்கம் இதுவரை எந்த முடிவையும் எடுக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் அமைச்சர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

வாகன இறக்குமதிக்கு அனுமதிக்கும் வகையிலான முறைமை தொடர்பாக அரசாங்கம் தற்போது விரிவாக ஆராய்ந்து வருகின்றது.

நாட்டில் டொலர் கையிருப்பில் இல்லாததன் காரணமாக தற்போது உடனடியாக வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்க முடியாது என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்தார்.

குறிப்பாக டொலர்களில் வரி செலுத்துவதற்கு ஒப்புக்கொள்ளும் நபர்களுக்கு வாகனங்களை இறக்குமதி செய்ய அனுமதிப்பது குறித்து அவதானம் செலுத்தப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

இந்நிலையில் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அமைச்சர் வாகனங்களை இறக்குமதி செய்வது தொடர்பில் இதுவரை எந்த முடிவும் எடுக்கப்படவில்லை எனக் கூறினார்.

## தகவல் அறியும் உரிமைச்சட்டம்; இளையோருக்குத் தெளிவூட்டல்

தகவல் அறியும் உரிமைக்கான சர்வதேச தினம் மற்றும் இலங்கையில் முதலாவதாக நிறுவப்பட்ட தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் ஐந்துவருட செயற்பாட்டுக்காலம் நிறைவுபெறல் ஆகியவற்றை முன்னிட்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பில் இளைஞர், யுவதிகளைத் தெளிவூட்டும் செயற்திட்டமொன்று மத்திய மாகாணத்தை மையமாகக்கொண்டு இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவால் முன்னெடுக்கப்பட்டது.

எப்ரியல் இளையோர் வலையமைப்புடன் இணைந்து இலங்கைத் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவால் நிகழ்நிலையில் (ஒன்லைன் வாயிலாக) நடத்தப்பட்ட இந்தத் தெளிவூட்டல் செயற்திட்டத்தில் சுமார் 200 இளைஞர், யுவதிகள் இணைந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழுவின் உறுப்பினர்களில் ஒருவரான சட்டத்தரணி கிஷாலி பின்டோ ஜனவர்தன மற்றும் மேன்முறையீட்டு நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் ரோஹினி வெல்கம ஆகியோருடன் ஊடகவியலாளர்களுடன் இணைந்துகொண்டு தகவல் அறியும் உரிமைச்சட்டம் தொடர்பான தெளிவுபடுத்தல்களை வழங்கிய அதேவேளை, சட்டத்தரணி ஜகத் லியனாராச்சியால் இந்நிகழ்வு நெறியாள்கை செய்யப்பட்டது.

'நீதி மற்றும் நியாயத்துவத்துக்காக தகவல் சட்டத்தை பயன்படுத்துவோம்' எனும் தொனிப்பொருளில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தத் தெளிவூட்டல் நிகழ்வில், தகவல் அறியும் உரிமைச்சட்டத்துடன் தொடர்புடைய வகையில் எதிர்நோக்கிய சவால்கள் மற்றும் அந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அடைந்துகொண்ட வெற்றிகள் தொடர்பில் மேற்குறிப்பிட்டோர் தமது அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டனர்.

தகவல் அறியும் உரிமைச்சட்டம் மேலும் வலுப்படுத்தப்பட வேண்டும், பகிரங்க அதிகாரசபைகள் என்ற அதன் வரைவிலக்கணத்துக்குள் அரசியல் கட்சிகளும் உள்ளடக்கப்பட வேண்டும், இந்தச் சட்டத்தை மேலும் வலுப்படுத்துவதற்கும் மேன்முறையீட்டு விசாரணையை செயற்திறன் மிக்கதாக மாற்றுவதற்கும் பிரதேச மட்டத்திலான அலுவலகங்கள் ஸ்தாபிக்கப்படவேண்டும் என்ற கருத்துக்கள் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த கிஷாலி பின்டோ ஜயவர்தனவால் முன்வைக்கப்பட்டன.

மேலும் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தைப் பயன்படுத்தி தகவல்களைப் பெறுவதற்கு முயற்சித்தபோது எதிர்நோக்கிய பிரச்சினைகளை சிலர் பகிர்ந்துகொண்டமையுடன் அவற்றைக் கையாளக்கூடிய முறை பற்றிய தெளிவுபடுத்தல்கள் நெறியாளர்களால் வழங்கப்பட்டன.

அதேவேளை வடமாகாணத்தைச் சேர்ந்த மக்கள் தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் மூலம் பெற்றுக்கொண்ட வெற்றிகள் தொடர்பாகத் தெளிவுபடுத்திய எப்ரியல் இளையோர் வலையமைப்பின் தலைவர் ரவீந்திர டி சில்வா, எவ்வித இனமத வேறுபாடுகளுமின்றி இந்தச் சட்டத்தைப் பயன்படுத்தி அவசியமான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்பதையும் உதாரணங்களுடன் விளக்கிக்கூறினார்.

அத்தோடு கடந்த 5 வருட காலப்பகுதியினுள் தகவல் அறியும் உரிமை ஆணைக்குழு வழங்கிய கட்டளைகளில் நூற்றுக்கு 85 சதவீதமானவை முழுமையாகவோ அரைவாசியாகவோ தகவல்களை வெளியிடல் என்றதனடிப்படையில் அமைந்ததாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டதுடன் அதுமாத்திரமன்றி தகவல் அறியும் உரிமைச்சட்டத்தின் தகவல்கோரல் மற்றும் பதில் வழங்கல் என்பன எழுத்து மூலமானதாகவே அமையவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# சாயி வந்தனன்! வாழ்வு தந்தனன்!

(வே.வரதசுந்தரம்)

புட்டபர்த்தி யாத்திரையின்போது,
அமைதியலை எங்கனும் பூத்துக் குழுங்
கும் பிரசாந்தி நிலையத்தில் யான்நேரில்
கண்ட, அனுபவித்த வியப்பு.

அதிகாலைப் பொழுது அது. முதிய
வர்களுக்கு ஒதுக்கியிருந்த இருக்கை
யில், பகவான் தரிசனம் நாடி அமர்கின்
றேன். நல்ல, உறுதியான உடலமைப்பு,
சுமார் ஏழடி உயரமான நீக்ரோ இளை
ஞன் எனக்கருகே வந்தமர்ந்தான். அத
னைக்கண்ட மாத்திரத்தே அருகிலிருந்த
தெலுங்கர்களான சாயிஅன்பர்கள் 'இது
முதியோருக்கான இருப்பிடம். இங்கு
நீ எப்படி அமர்வாய்?' என்றுகூறி அவர்
கள் அவ்விளைஞனுடன் குமுறினர்.

'பிரசாந்தி நிலையத்துக்கு இதுவே
என்முதல் வருகை. நான் அமெரிக்க
நாட்டுப் பிரஜை. இன்றுதான் பகவான்



பாபாவுடன் சிவநாயகம் தம்பதியர்

பாபாவை முதன்முதலாகத் தரிசிக்கப்
போகின்றேன். எனவே எனக்கு பிரசாந்தி
நிலைய ஒழுங்குகள் எதுவும் தெரியாது.
மன்னிக்கவும. நாளை நான் வேறிடத்
தில் அமர்வேன்' – அவர் பணிவாக என்
னிடம் ஆங்கிலத்தில் இவ்வாறு கூற,
நானதனை தெலுங்கு நண்பர்களுக்கு
விளக்க பிரச்சினை தணிந்தது.

பயபக்தியுடன் பகவான் பாபா வரு
கைக்கு காத்திருக்கின்றோம். எக்கணம்
வருவார், எக்கணம் வருவார் என்ற
ஏக்கத்துடன் அமர்ந்து இருக்கிறோம்.
திடீரென நறுமணம் காற்றில் மிதந்து
வருகின்றது. சுவாமி வரப்போகின்றார்
என்ற நம்பிக்கை பிறக்கிறது. தன்னில்
லத்திலிருந்து பக்தர்களுக்குத் தரிசனம்
தர வருகின்றார். அடியார்கள் 'சாயிராம்!
சாயிராம்!' என்று ஓதியவாறு மெய்ம



பாபா அருளிய மோதிரம்

றந்து இருக்கின்றோம்.

நாமெல்லாம் அவரைப் பார்த்ததும்
துன்பங்கள்பறந்தேபோயின.
எமக்கருகே வந்த சுவாமி,
எம்மைப் பார்க்கவில்லை.
எனக்கருகே அமர்ந்திருந்த
நீக்ரோ இளைஞனை நோக்
கியவாறு வந்தார். ஏதோ
பல்லாண்டுகள் அவருடன்
பழக்கமுள்ளவர்போல் முகத்
தில் புன்னகை பூத்தவாறு
சைகையால் குசலம் விசாரித்
தார். சைகையாலேயே
'எப்போ வந்தாய்?' என்றும்
வினவினார். 'நேற்றுத்
தான்' ...என்றான் இளை
ஞன். 'எவ்வளவு ஆண்டு
கள் நாமிங்கு சுவாமியுடன்
சம்பாஷிக்கத் தவங்கிடக்
கின்றோம். நேற்றுவந்த இவனுடன்
மகிழ்ச்சியுடன் உறவாடுகிறாரே' என்று
புலம்பினர் அவனுடன் முரண்பட்ட
தெலுங்கு சாயிபக்தர்கள்.

புட்டபர்த்தி யாத்திரை வந்து ஆறு
மாதம், மூன்றுமாதம் என்று என்
துணைவி வில்வராணி, புதல்வன் செந்
தூரன் ஆகியோருடன் இங்கு தங்கி வழி
பாட்டில் ஈடுபடுகிறேன். என்னை பாபா
ஒரு தடவையேனும் நோக்கியதில்லை.
நேர்காணலுக்கு அழைத்ததில்லை.
ஆனால் நேற்றுத்தான் முதன்முதல் வந்த
இளைஞனை......என்று மனம்நொந்
தேன். உண்மை விளங்கியது. என்பக்தி
யின் வெறுமை, எந்தன் ஆன்மீக வாழ்
வின் வறுமையைப் புரிந்துகொண்டேன்.

சிலவினாடிகளில் சாயிபாபா தொண்டர்
ஒருவர் இவ்விளைஞனை நோக்கிய
வாறு வந்தார். 'சுவாமி உம்மை நேர்
காணலுக்கு அழைக்கின்றார்.'.. என்றார்.
அருகிருந்த சாயி பக்தர்கள் வியக்க, உய
ரமான இவ்விளைஞன் நிமிர்ந்த நெஞ்
சுடன், புன்னகை பூத்தவண்ணம், திமிர்
கொண்ட பார்வையுடன், இராணுவ அதி
காரிகளின் துணிச்சல் நடைபோட்டு நேர்
காணலுக்குச் சென்றான்.

சொற்பநேரம் கழித்து நேர்காணல்
முடிந்து திரும்புகின்றான். இறுமாப்புடன்
சென்ற இளைஞன் மெல்ல, மெல்ல அடி
யெடுத்து பணிவுடன், பக்குவமாக, அமைதி
யாக, தனது இருக்கைக்குத் திரும்புகி
றான். முகத்தில் சாந்தம். மகிழ்ச்சி. புறத்
தேயும், அகத்தேயும் பாரிய மாற்றம். சில
மணிநேரத்துக்கு முன்னர் இளைஞ
னைத்திட்டிய தெலுங்கு அன்பர்கள் அவ்
விளைஞனை நோக்கி கைகூப்பி 'சாயி
ராம்! சாயிராம்!' என்றார்கள். அவன் கை
விரலிலிருந்த பாபா சிருஷ்டித்து அருளிய
மோதிரத்துக்கு பயபக்தியுடன் மாறி
மாறி முத்தம் கொடுத்தனர். அவன் உள்
ளங்கையிலிருந்த பகவான் பாபா அரு
ளிய விபூதியைப் பெற்று தத்தம் நெற்றி
யில் அணிந்தனர். இளைஞன் காலிலும்
வீழ்வார்கள் போல் தோன்றியது.

பாபா தரிசனம், நேர்காணல் இளை
ஞனிடத்தே ஏற்படுத்திய மாற்றம். கண்டு
வியந்தோம். பாபாவைப் பார்த்தால்
போதும், பக்குவம், பண்பு மலரக் காண்
போம்.

இதனையடுத்து, கொழும்பு ஸ்ரீசத்
திய சாயிபாபா நிலைய தலைவர் எஸ்.என்.
உதயநாயகன் அவர்கள் கூறும் பகவான்
சாயி அற்புதம் காண்போம்: –

'சுமார் முப்பது ஆண்டுகளுக்கு முன்
னர் எங்கள் சாயி நிலையத்துக்கு ஒரு
சொந்தக் கட்டடம் இருக்கவில்லை.
போதிய பணவசதியும் இருக்கவில்லை.
அப்போது எங்கள் சாயிநிலைய நிர்வா
கிகள் பல கஷ்டங்களுக்கு மத்தியில் சாயி.
பஜனை நடாத்தி வந்த காலமது. அப்போது
சாயிமத்திய நிலைய அப்போதைய தலை
வரும் எனது தந்தையுமான அமரர் எஸ்.
டி.சிவநாயகம் அவர்களுக்கு சத்திய
சாயி பகவானைத் தரிசிக்கும் பாக்கியம்
கிட்டியது.

அப்போது பகவான் தந்தையாரிடம்
இலங்கையில் சாயி சமித்தியின் செயற்
பாடுகளை விசாரித்தார். சாயி மார்க்கத்
தைத் திறமையாக வழிநடத்துமாறு
கூறியபாபா தனது வலதுகையை
உயர்த்தி ஒருவெள்ளி மோதிரத்தை
சிருஷ்டித்து தலைவரின் கைவிரலில்
அணிவித்தார். பின்னர், 'அதில் என்ன
தெரிகிறது?'..என்று கேட்டார். ஆச்சரியம்,
பதற்றம் காரணமாக தலைவர் 'சீரடி
பாபா தெரிகின்றார்.' என்று பதிலளித்
தார். உடனே பாபா 'ஏன் மேலே நான்
இருக்கிறேன் பார்' என்றார்.

என்ன அதிசயம்! அந்த மோதிரத்தில்
மேலே சத்திய சாயிபாபா உருவத் தோற்
றம், கீழே சீரடிசாயிபாபா தோற்றம்
காணப்பட்டன. அம்மோதிரம் பல்லாண்
டுகளாக பூஜையறையில் வைத்து என்
தாயாரால் பூஜிக்கப்பட்டு வந்தது. பாபா
வின் 80 ஆவது பிறந்த நாளன்று,
என்தாயார் அந்த மோதிரத்தை என்னி
டம் கொடுத்தார். முப்பது ஆண்டுகள்
கழித்து அந்த மோதிரம் என் கைக்கு
வந்ததன் நோக்கத்தை, அப்போதுதான்
உணர்ந்தேன். பாபாவின் நீண்ட
காலத் திட்டத்தையும், முன்கூட்டியே
தீர்மானிக்கும் அவரது தொலைநோக்
குத் தீர்க்க தரிசனத்தையும் கண்டு
ஆச்சரியப்பட்டேன்.

முப்பது ஆண்டுகள் கழித்து, வேப்ப
மரத்துடன் கூடிய இடம் கொழும்பில்
வாங்கப்பட்டமையும், அங்கேயொரு
பிரமாண்டமான மாடிக் கட்டடம் அமை
யப் பெற்றமையும், அதற்கு 'சாயி நிலை
யம்' என்று பெயரிடப்பட்டமையும்,
மோதிரத்தில் வடிவமைக்கப்பட்டவாறு
மேல்மண்டபத்தில் பகவான் ஸ்ரீசத்திய
பாபாவின் சிலை நிறுவப்பட்டமையும்,
கீழ்மண்டபத்தில் சீரடிசாயி சாயிபாபா
வின் சந்நிதானம் 'சீரடிமந்திர்' என்ற
பெயரில் அமையப்பெற்றமையும் பக
வானின் தெய்வீகச் செயலன்றோ!

உயர்ந்த விலைமதிப்புடைய பக்கத்
துக் காணி நன்கொடையாகக் கிடைத்
தமையும், வேப்பமர வேர் படர்ந்த சாயி
நிலையத்துள் 'சீரடிமந்திர்' என்ற சந்நி
தியை சீரடிபாபா தனக்காகத் தேர்ந்
தெடுத்தமையும், மோதிரத்தைக்
கொடுத்து, மேலேயும், கீழேயும் சாயி
அவதாரங்கள் இருக்கப்போவதை பக
வான்பாபா முன்கூட்டியே சுட்டிக்காட்
டிய தீர்க்கதரிசனமும் கொழும்பு ஸ்ரீசத்தி
யசாயி மத்திய நிலைய வரலாற்றில்
பகவான்பாபா நிகழ்த்திய பல்வேறு அற்
புதங்களில் முதன்மையானவை ஆகும்.
பகவானே என்னேநின் கருணை!



பாபாவிடம் மோதிரம்பெறும் சாயி பக்தர் சிவநாயகம்



கொழும்பு சாயிசமித்தி தலைவர் உதயநாயகன்

காலைக்கதிர் Kalaikkathir

# நீதியமைச்சரினை சந்தித்து பேசியது ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் குழு





இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐரோப்பிய ஒன்றிய தூதுக்குழுவினருக்கும், நீதியமைச்சர் அலி சப்ரிக்கும் இடையில் சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தால் வழங்கப்படும் ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை எதிர்காலத்திலும் பெற்றுக் கொள்வது தொடர்பில் இதன்போது ஆராயப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் இலங்கைக்கு வழங்கப்படும் சலுகை தொடர்பாக சாதகமான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் இதன்போது, குறிப்பிட்டனர் என நீதியமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

இதற்கமைய, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் தொடர்பில் அவர்கள் சாதகமான பதில்களை வழங்கியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## சீன சேதனப் பசளையில் பக்டீரியா 2 ஆவது சோதனையிலும் உறுதி

சீனாவில் இருந்து நாட்டுக்கு கொண்டுவருவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த சேதனப் பசளையில் பாதிப்பை ஏற்படுத்தும் பக்டீரியா காணப்படுவதாக இரண்டாவது தடவை மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையிலும் உறுதியாகியுள்ளது.

இதனையடுத்து, இதனை நாட்டுக்கு இறக்குமதி செய்வதற்கான அனுமதியை விவசாயத் துறை நிராகரித்துள்ளதாக பணிப்பாளர், கலாநிதி அஜந்த டி சில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை பெறப்பட்ட மாதிரிகள் மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே இது தொடர்பாக உறுதி செய்யப்பட்டதாக அவர் ஆங்கில ஊடகமொன்றுக்குத் தெரிவித்துள்ளார்.

மேலும் தீங்கு விளைவிக்கும் பக்டீரியாவுடன் கூடிய பசளையை விவசாயத் துறை ஒருபோதும் நாட்டுக்குள் அனுமதிக்காது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

## யானை - மனித மோதலுக்கு விரைவில் தீர்வு வழங்கப்படும்

### விமலவீர திசாநாயக்க உத்தரவாதம்



அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களில் நீண்ட காலமாக நிலவி வரும் யானை - மனித மோதலுக்கான தீர்வு விரைவில் பெற்றுக் கொடுக்கப்படும் என வன ஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார் .

இதற்கமைய அம்பாறை மற்றும் பதுளை மாவட்டங்களில் காட்டு யானைகளின் அச்சுறுத்தலைக் குறைக்க உடனடி நடவடிக்கை தொடர்பில் மகாஓயா சிவில் பாதுகாப்பு படை முகாம் கேட்போர் கூடத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை உயர்மட்ட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது .

இதன் போது ஏற்றுக்கொள்ளப்பட்ட தீர்மானதுக்கு அமைவாக, புதன்கிழமை தொடக்கம் அனைத்து மின்சார யானை வேலிகளிலும் இரவு நேர ரோந்து நடவடிக்கை முன்னெடுக்கப்படும் எனக் கூறினார்.

மேலும் மின்சார யானை வேலியின் 1 கி. மீ. தொலைவில் ஒரு காவல் நிலையம் அமைக்கப்படும், இவ்வாறு அமைக்கப்படும் ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் 04 காவலர்கள் நியமிக்கப்படுவார்கள். எதிர்காலத்தில் இதற்கென 5 ஆயிரம் புதிய பாதுகாப்பு அதிகாரிகள் நியமிக்கப்படுவார்கள் எனவும் வனஜீவராசிகள் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் சிவில் பாதுகாப்பு படையினர் எதிர்நோக்குகின்ற பல்வேறு பிரச்சினைகள் ஆராயப்பட்டு தீர்வுகளும் எட்டப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தனிமைப்படுத்தல் மீறல் மேலும் 333 பேர் கைது

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவை மீறிய குற்றச்சாட்டுக்காக நேற்று (புதன்கிழமை) காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியில் 333 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்த கால கட்டத்தில் 21 வாகனங்களும் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன எனப் பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி குற்றச்சாட்டுக்காக கடந்த ஒக்ரோபர் 30 முதல் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 79 ஆயிரத்து 247 நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை மேல் மாகாணத்தின் நுழைவு மற்றும் வெளியேறும் பகுதிகளில் கடந்த செவ்வாய்க்கிழமை 1,149 வாகனங்களில் பயணித்த 1,877 நபர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

இதன்போது உரிய காரணமின்றி மாகாண எல்லைகளை கடக்க முயன்ற 251 நபர்கள் திருப்பி அனுப்பப்பட்டும் உள்ளனர்.

## அத்தியாவசிய உணவுப் பொருள்களை விடுவிக்க 5 கோடி டொலர்களை வழங்கியது மத்திய வங்கி

கொழும்பு துறைமுகத்தில் சிக்கியுள்ள அத்தியாவசிய உணவுப் பொருள்களை விடுவிப்பதற்காக இலங்கை மத்திய வங்கி சுமார் 5 கோடிஅமெரிக்க டொலர்களை வழங்கியுள்ளது.

குறித்த 5 கோடி அமெரிக்க டொலர்களை 2 அரச வங்கிகள்ஊடாகஇறக்குமதியாளர்களுக்குவழங்கப்படவுள்ளதாக மத்திய வங்கியின் ஆளுநர் அஜித் நிவார்ட் கப்ரால் தெரிவித்துள்ளார்.

மேலும் அத்தியாவசியப் பொருள்களை விடுவிக்க இதற்கு மேலதிகமாக அதிக பணம் தேவைப்பட்டால் இலங்கை மத்திய வங்கி அதனை வழங்கத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## மட்டு. கிரான்குளத்தில் விபத்தில் ஒருவர் சாவு

மட்டக்களப்பு - காத்தான்குடி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கிராண்குளம் பகுதியில் நேற்று (புதன்கிழமை) இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு,களுதாவளை பகுதியைச் சேர்ந்த 27 வயது மதிக்கத்தக்க இளைஞர் ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் எனக் காத்தான்குடி பொலிஸார் தெரிவித்துள்ளனர் .

கல்முனையில் இருந்து வந்த காரும் மட்டக்களப்பில் இருந்து சென்ற மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் மோட்டார் சைக்கிளில் சென்றவர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார் .

இதன்போது உயிரிழந்தவரின் சடலம் வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன்,மேலதிக விசாரணைகளை காத்தான்குடி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## யாழ்.மாநகர எல்லைக்குள் இயங்கும் நீர் விற்பனை நிலையங்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கைகள்!

யாழ்.மாநகர சபைக்கு உட்பட்ட பகுதிகளில் அனுமதியின்றி சுத்திகரித்த குடிதண்ணீர் விற்பனை செய்யும் நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்குத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையின் மாதாந்த பொதுக்கூட்டம் யாழ்.மாநகர முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன் தலைமையில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

அதன் போது , மாநகர சபை உறுப்பினர் வ. பார்தீபன் மாநகர சபை எல்லைக்குள் அனுமதி இன்றி சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை நிலையங்கள் பல இயங்கி வருகின்றன அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் எனக் கோரி பிரேரணையை சபையில் முன் வைத்தார்.

அதனை சபை ஏக மனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானமாக நிறைவேற்றியது.

நாடு திறக்கப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைகள் இயல்பு நிலைக்குத் திரும்பிய பின்னர் வழக்குகள் தாக்கல் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

அதேவேளை, சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை விநியோகம் செய்யும் நிறுவனங்கள், எந்தவிதமான அனுமதியையும் பெறாமலே தண்ணீரை விற்பனை செய்து வருகின்றன.

அந்த தண்ணீரின் தரம் தொடர்பில் எவராலும் சான்று வழங்கப்படுவதில்லை. அத்துடன் நீரில் உள்ள கனியுப்புக்கள் வடிகட்டப்படுவதால் கனியுப்புக்கள் அற்ற நீரே விற்பனை செய்யப்படுகிறது.

யாழ்.மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நிலத்தடி நீர் ஆதாரமே உண்டு. அனுமதியின்றி இயங்கும் சுத்திகரிக்கப்பட்ட நீர் விற்பனை செய்யும் நிறுவனங்கள் ஒரு லீற்றர் சுத்திகரிக்கப்பட்ட நீரைப் பெறுவதற்காக சுமார் 4 லீற்றர் நீரை விரயம் செய்கின்றனர்.

விரயமாகும் நீரை வீண் விரயமாகாது தடுப்பதாகக் கூறி பலர் மீண்டும் கிணற்றுக்குள் அந்த நீரை விடுகின்றனர். அது மிகவும் ஆபத்தானது.

ஏனெனில் மழை பெய்து நிலத்தில் தேங்கும் நீர் கற்பாறைகள் ஊடாக வடிகட்டப்பட்டு நிலத்தடி நீருடன் கலக்கின்றன. ஆனால் இவர்கள் நீர் சுத்திகரிப்புக்கு எடுத்த நீரில் விரயமாகும் நீரை மீளக் கிணற்றுக்குள் விடுவதால், அது கிணற்று நீரை மாசுபடுத்துவதுடன் நிலத்தடி நீர் நிலைகளையும் மாசுபடுத்துகின்றன.

இதனால் யாழ்ப்பாணம் குடிதண்ணீருக்கு பாரிய ஆபத்தை எதிர்நோக்கும் அபாயம் காணப்பட்டது.

இவ்வாறாக பல தரப்பினராலும் குடிதண்ணீர் விற்பனை நிலையங்கள் தொடர்பில் சுட்டிக்காட்டப்பட்டு வந்த நிலையில் யாழ். மாநகர சபையில் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 30.09.2021 இல் வெளியிடப்பெற்றது.

# தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தின் அடுத்தகட்டம் ஆக்கபூர்வமாக ஆரம்பம்!

## கூட்டமைப்பின் எம்.பி. சிறிதரன் தெரிவிப்பு

தமிழ்த் தேசிய விடுதலைப் பயணத்தை அடுத்தகட்டம் நோக்கி எடுத்துச் செல்வதற்கான ஆரம்ப முன்முயற்சியை, திருமலை மறைமாவட்ட ஆயர், அதி வணக்கத்திற்குரிய கலாநிதி.கி.நோயல் இம்மானுவேலும் தென்கயிலை ஆதீனத்தின் முதற்குருமகா சந்நிதானம் தவத்திரு அகத்தியர் அடிகளா ரும் இணைந்து முன்னெடுத்திருப்பது, போரின் நேரடித் தாக்கங்களால் கல்வி, கலை, கலாசார, மொழி, நில, இன அடையாள ரீதியாக கடுமையாக பாதிக்கப்பட்டு, வலிதாங்கி நிற்கும் தமிழினத்தின் ஆழ்மனக் காயங்களுக்கு அருமருந்தாய் அமைந்துள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

ஈழத் தமிழ்த் தேசிய இனம் சருகாக நெரிபட்டு, சிதிலம் சிதிலமாக சிதறுண்டு போய், நிர்க்கதியற்று அந்தரித்து நிற்க வேண்டுமென்றும், எமது வாழ்வியல் பரம்பரை இறைமையைப் பறித்தெடுக்க வேண்டுமென்றும், காலம் காலமாக எம் மீது இனவன்முறைகளைக் கட்டவிழ்த்து விடும் பௌத்த சிங்களப் பேரினவாதம் கங்கணம் கட்டிநிற்கும் இந்தக் காலச் சூழலில், தமிழ்த் தேசிய இனம் ஒரு தலைமையின் கீழ் கட்டுப்படவோ, கூட்டுத் தலைமையொன்றின் கீழ் ஒன்றுபடவோ முடியாத கையறு நிலையில் மெல்ல மெல்ல கூறுபடத் தொடங்கியுள் ளதை உணர்ந்து, காலத்தின் தேவை யையும், இனத்தின் இருப்பை உறுதிசெய்ய வேண்டிய இறுதி நிலையையும் கருதி ஈழத்தின் தலைநகரிலிருந்து இரு மதத் தலைவர்கள் இணைந்து முன் னெடுத்திருக்கும் 'தமிழ்ப் நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஒன்றிணைந்த கருத்தை சமூக இணைவுடன் வெளிப்படுத்தச் செய்யும் பொது முயற்சி' ஆயுதப் போர் மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழ்த் தேசிய விடுதலை வரலாற்றில் முன்னெடுக்கப்பட்ட முயற்சிகளில் நம்பிக்கை தரும் புதியதோர் ஆரம்பமாகவே பார்க்கப்படுகின்றது.



தமிழ்த் தேசிய அரசியல் பரப்பில் ஆக்கபூர்வமான மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்துள்ள இம்முயற்சியானது, அரசியல் ரீதியாக கருத்து முரண்பாடுகளைக் கொண்டிருக்கும் தமிழ்த் தேசிய இனத்தை ஒன்றிணைக்கும் முயற்சிகளில் முழுமூச்சாய் ஈடுபட்டு வரும் புலம்பெயர் தமிழ் சமூகப் பரப்பிலும் ஆரோக்கியமான தாக்கத்தை ஏற்படுத்துமென நம்புகின்றேன்.

தமது சொந்த மண்ணிலேயே அடிப்படை உரிமைகளற்ற, நசுக்கப்பட்ட இனமாக இருந்துகொண்டு தனது இருப்பைத் தக்கவைப்பதற்காய் எல்லா வழிகளிலும் போராடத் தலைப்பட்டுள்ள தமிழினத்தின் நிலையறிந்து, இன நலன் ஒன்றையே இலக்காகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்டுள்ள இந்தப் பொதுமுயற்சி தடையின்றித் தொடர வாழ்த்தும் அதேவேளை ஈழத் தமிழ் மண்ணையும், மக்களையும் இதயசுத்தியோடு நேசிக்கும் தமிழ்த் தேசியப் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் காலக்கடமை உணர்ந்து இம்முயற்சியில் உரிமையோடு அணிசேர வேண்டுமெனவும் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

# கொரோனாவுக்கு முடிவு கட்டும்வரை எந்தத் தேர்தலும் நடத்தப்படக் கூடாது

## சஜித்தின் திட்டத்துக்கு ரணில் கடும்எதிர்ப்பு



இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று முழுமையாக கட்டுக்குள் வரும் வரை எந்தவொரு தேர்தலும் நடத்தப்படக்கூடாது.

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதமருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தற்போதைய அரசு பதவி விலகி, மக்கள் ஆணையை பெறுவதற்காக தேர்தலொன்று நடத்தப்பட வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முன்வைக்கப்பட்டுள்ள அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:–

கொரோனா வைரஸ் பரவல் உள்ள சூழ்நிலையில் தேர்தலொன்றை நடத்துவது பொருத்தமா என சிந்திக்க வேண்டும்.

கொரோனாவுக்கு மத்தியில் கனடா பிரதமர் தேர்தலுக்குச் சென்றார். அவர் சிறப்பாக பொருளாதாரத்தை நெறிப்படுத்தினார். வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தினார். இதனால் பெரும்பான்மை பலம் கிடைக்கும் என்ற எதிர்ப்பார்ப்பில் தேர்தலுக்குச் சென்றார். ஆனால், பெரும்பான்மைப் பலம் கிடைக்கவில்லை.

கொரோனாவுக்கு மத்தியில் தேர்தல் நடைபெறுவதற்கு அந்த நாட்டு மக்கள் அதிருப்தியை வெளியிட்டுள்ளனர்.

எனவே, இலங்கையில் கொரோனா முழுமையாக கட்டுக்குள் வரவில்லை. மீண்டுமொரு சுற்று வரலாம். எனவே, தற்போதைய சூழ்நிலையில் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்கும், பொருளாதாரத்தை மீட்பதற்குமே நாம் முன்னுரிமை வழங்க வேண்டும். இவ்விரு விடயங்களையும் சீர்செய்த பின்னர் தேர்தலுக்குச் செல்லலாம் – என்றார்.

# பல்கலைக்கழகங்களை நவம்பரில் திறக்க முடிவு

நாட்டிலுள்ள அனைத்துப் பல்கலைக் கழகங்களையும் எதிர்வரும் நவம்பர் மாதத்தில் மீளத் திறப்பதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

- இவ்வாறு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க தெரிவித்தார்.

20 முதல் 30 வயதுக்கு இடைப்பட்டவர்களுக்கான தடுப்பூசி செலுத்தும் பணிகளை அரசு அடுத்த மாத இறுதிக்குள் நிறைவு செய்யுமாயின், எதிர்வரும் நவம்பர் மாதம் பல்கலைக்கழகங்களை மீளத் திறக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை, பல வருடங்களுக்குப் பின்னர் பல்கலைக்கழகங்களுக்கு உள்வாங்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கை இம்முறை 10 ஆயிரத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது. இதற்கமைய, பல்கலைக்கழகங்களுக்கு 42 ஆயிரம் மாணவர்கள் தகுதி பெற்றுள்ளனர்.

எதிர்காலத்தில் இவ்வாறான அதிகரிப்பை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் மேலும் கூறினார்.

## வாள்களுடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தனது வீட்டினுள் மிகவும் கூரிய திறனான முறையில் வடிவமைக்கப்பட்ட வாள்களை வைத்திருந்த 24 வயது இளைஞரே கைதுசெய்யப்பட்டவராவார்.

குறித்த நபர் வாள்களை வைத்திருப்பதுமன்றி அக்கிராமத்தில் பல வன்முறைச் சம்பவங்களிலும் ஈடுபட்டு வந்திருந்தார். அண்மையிலும் வாள்களைக் கொண்டு அங்கிருந்தவர்களை மிரட்டி கலவரத்தில் ஈடுபட்டிருந்தார்.

இவர் ஹெரோயின் போதைப்பொருள் பாவனை மற்றும் விற்பனையில் ஈடுபட்டு வந்திருந்தார்.

யாழ்.மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவினர் இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட நிலையில் குறித்த வீடு நேற்றுப் பொலிஸாரால் சற்றிவளைக்கப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டிருந்தது.

இதன்போது வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 2 கூரிய வாள்கள் பொலிஸாரால் மீட்கப்பட்டன. அத்துடன் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டதுடன் மேலதிக விசாரணைகளின் பின் அச்சு வேலிப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தார்.

குறித்த கைது நடவடிக்கை யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு உபபொலிஸ் பரிசோதகர் பிரதீப் ராஜரட்ணம் தலைமையில் இடம்பெற்றிருந்தது.

## அவசரமாக கொழும்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இருநாட்டு வெளியுறவு அமைச்சர்கள் அமெரிக்காவில் சந்தித்து ஒருவாரம் கழிந்துள்ள நிலையில் இந்திய வெளியுறவு செயலரின் இந்தப் பயணம் இடம் பெறுகின்றது.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருகின்றது என விமர்சனங்கள் தீவிரமாக இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

# ஊழல் குற்றச்சாட்டுகளை மறுக்கின்றார் யாழ் மேயர்

யாழ்ப்பாணம், செப். 29

மாநகர சபையில் இடம்பெறும் திட் டங்கள் முறையான நடைமுறையைப் பின்பற்றாது பாரிய ஊழல் மிக்கவையாகவே முன்னெடுக்கப்படுகின்றன என மாநகர சபை உறுப்பினர் வை.கிருபாகரன் சபையில் சுட்டிக் காட்டினார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் செப்ரெம்பர் மாத கூட்டம் சபை மண்டபத்தில் முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதன்போதே உறுப்பினர் இதனை சுட்டிக் காட்டினார்.

ஊழல் என்பது நான்கு வகைப்படும். அதில் அதிகாரத்தில் உள்ளவர் நேரடியாக நிதி மோசடியில் ஈடுபடுவது, தன் நண்பர்களோ அல்லது உறவுகள் நன்மை அடையும் வகையில் செயல்படுவது, அதிகார துஷ்பிரயோகம், உள்ளிட்டவை இதில் அடங்குகின்றன. இதற்கமையொரு திட்டம் நண்பருக்கு வழங்கப்பட்டுள்ளது.

திட்டமிடல் வழிகாட்டி நூலின் பிரகாரம், தொழில் நுட்பக் குழு பார்வையிட்டு அறிக்கை தயாரித்து, செலவு விவரம் தயாரித்து, வெளிப்படை தன்மையாக செயல்பட வேண்டும். வெளிப்படைத் தன்மையும் பேணப்படாவிட்டால் அது ஊழல் எனப்படும்.

இதேபோன்று 'கன்ட்றிபோட்'டில் முதல் செயல்பட்ட விதம் பிழை. இதிலும் சிலர் நன்மை அடையும் வகையிலேயே விடயங்கள் முன்னெடுக்கப்படுத்தப்பட்டன. அதனை நடைமுறைப்படுத்த ஏன் அவசரம் காட்டப்படுகின்றது? இதேபோன்று சிமாட்போல் விடயத்தில் இன்னும் தீர்மானிக்காது ஒப்பந்தப் பிரதி சபைக்கு வந்து விட்டது.

இதேநேரம் சபையின் மின்சாரப் பிரிவிற்கு சபை அனுமதி இல்லாமல் ஏப்பிரல் மாதம் இரகசியமாக எடுத்த ஊழியர்கள் சபையின் கூற்றிற்கு அமைய இடை



நிறுத்தப்பட்டனர். ஆனால் உங்கள் கட்சி உறுப்பினர்களின் உறவுகள் என்ற வகையில் மீண்டும் சபை அனுமதி இல்லாது நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

இதேபோன்று சபையின் பாவனைக்கு தனியார் உழவு இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்த கூறுவிலை கோரப்பட்டது. ஆனால் குறைந்த விலை கோரியவர்களிற்குகூட அதிக பணமே சபையால் வழங்கப்படுகின்றது என்றார்.

இவற்றிற்கு பதிலளித்த முதல்வர் சபை முறைமையின் கீழேயே பணிகள் இடம் பெறுகின்றன. ஊழல் இடம்பெற்றதாக கருதிநால் நான் ஓர் சட்டத்தரணி என்ற வகையில் நீங்கள் என்ன செய்யலாம் என்பதனை தெரிவிக்கின்றேன். நீங்கள் இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவை நாடலாம். இதேநேரம் உழவு இயந்திர விடயத்தில் கூறுவிலை போட்ட அனைவரும் ஓர் உழவு இயந்திரமே தங்களிடம் உண்டு எனத் தெரிவித்தோடு குறைந்த தொகைக்கு ஓட முடியாது எனத் தெரிவித்தனர். இதனால் அனைவரையும் கூப்பிட்டு கதைத்த போது கடந்த ஆண்டைப்போல் அனைவருக்கும் கிலோ மீற்றருக்கு 55 ரூபா வழங்கினால் ஓட முடியும் எனத் தெரிவித்தமையினாலேயே அது வழங்கப்பட்டது. – என்றார்.

# “நான் ரெடி; நீங்கள் ரெடியா?”

## பகிரங்க விவாதத்துக்கு சுமந்திரனுக்கு சிவாஜி அழைப்பு



(இ.கலையமுதன்)

நான் ரெடி; நீங்கள் ரெடியா? எனத் தெரிவித்து நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனுக்குப் பகிரங்க விவாதத்துக்கு அழைப்பு விடுத்துள்ளார் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே. சிவாஜிலிங்கம்.

யாழ். ஊடக அமையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இந்த அழைப்பை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

என்னைப்பற்றி சுமந்திரன் தனியார் ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித்ததை நான் அவதானித்தேன். வல்வெட்டித்துறை நகர சபை கூட்டமைப்பிடம் இருந்து பறிபோனதற்கு சுரேஷ் பிறேமச்சந்திரன் மற்றும் விக்னேஸ்வரன் ஐயாவை துரோகிகள் என்ற அர்த்தத்தில் நான் பேசியதாக சுமந்திரன் கருத்துத் தெரிவித்திருந்தார். நான் விக்னேஸ்வரன் மற்றும் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரைத் துரோகி எனக் கூறவில்லை என்பதை எனது காணொலியைப் பார்த்தால் நன்கு தெரியும்.

நகர சபைத் தவிசாளரைத் தேர்ந்தெடுப்பதிலே அதிருப்தியுற்று சதீஸ் அந்தக் கூட்டத்தைப் பகிஷ்கரித்திருந்தார். கூட்டத்தை பகிஷ்கரித்திருந்த சதீஸ் எவ்வாறு தவிசாளராகப் போட்டியிட்டிருப்பார்? ஊடகப் பேச்சாளர் என்று கூறிக்கொண்டு தெரியாத விடயங்களைப் பற்றி சுமந்திரன் பேசக்கூடாது .தெரியாத விடயங்களைக் கேட்டு தெரிந்துகொள்ள வேண்டும்.

நெடுந்தீவு பிரதேசசபை தவிசாளர் பதவியில் இருந்துகொண்டு கோட்டாபய ராஜபக்சவுக்கு ஆதரவாகச் செயற்பட்டவரின் உறுப்புரிமை பறிக்கப்பட்டு தற்போது அங்கு ஈ.பி.டி.பி. ஆட்சி அமைக்கப்பட்டிருக்கின்றது. அப்படியானால் ஏன் சதீஷினுடைய உறுப்புரிமையைப் பறிக்க முடியாமல் போனது? ஜனாதிபதி சட்டத்தரணியால் முடியாமல் போய் விட்டதா? உங்களுடைய கனிஷ்ட சட்டத்தரணிகள் சரியாகச் செய்யவில்லை என்றால் அதனைச் செய்விக்க வேண்டியது யார்?

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் இந்த வழக்கில் ஐந்து தடவைக்கு மேல் சுமந்திரன் ஆஜராகி 42 மாதங்கள் கடந்தும் இந்த வழக்குத் தொடர்ந்து கொண்டே இருக்கின்றது.

சதீஷ் ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்தார் எனச் சுமந்திரன் தெரிவித்திருந்தார். எனக்கென்னவோ சுமந்திரனுக்கு ரணிலுடன் பழைய நினைவுகள் வந்துவிட்டதுபோல்தான் தென்படுகின்றது. சதீஸ் ஐக்கிய மக்கள் சக்தியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கணேஸ்வரன் வேலாயுதத்தின் இணைப்புச் செயலாளராகவே சம்பளத்துக்குப் பணிபுரிந்தார்.

நான் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு அனுப்பியதாகச் சுமந்திரன் கூறும் கடிதத்தை அவர் வெளிப்படுத்த வேண்டும். நான் விக்னேஸ்வரன் ஐயாவுக்கு எழுதிய கடிதம் என்பது வல்வெட்டித்துறை நகர சபை வரவு – செலவுத் திட்டம் தொடர்பாக உள்ள பிரச்சினைகளை பற்றியதாகும். அதில் நான் யாரையும் துரோகி என்று கூறவில்லை.

நான் தமிழ் தேசியக் கூட்டமைப்பிலும் இல்லை; ரெலோவிலும் இல்லை. ஆனால் நான் ஏதோ கள்ள உறவு வைத்திருப்பது போல் சுமந்திரன் சித்தரிக்கின்றார். வல்வெட்டித்துறை நகர சபையில் தமிழ்த் தேசியத்தின் ஆட்சி நிலை நிறுத்தப்பட வேண்டும் என்பதற்காகவே நான் செயல்பட்டேன்.

கூட்டமைப்புக்கு எதிராகச் செயற்பட்ட ஒருவரையும் கூட்டிக்கொண்டு வல்வெட்டித்துறை நகர சபையின் புதிய தவிசாளரை சுமந்திரன் சந்தித்திருக்கிறார். நீங்கள் கூட்டமைப்பின் ஒற்றுமையைக் குலைக்கின்றீர்களா? யாழ். மாநகர சபையிலும் இதே வேலையை செய்தீர்கள்.

தவிசாளர் இல்லாதவிடத்து அடுத்த தவிசாளர் போட்டிக்கு உப தவிசாளரையே நியமித்திருக்க வேண்டும் எனச் சுமந்திரன் கூறுகிறார். ஆனால், இதே விடயத்தை நல்லூர் பிரதேச சபையிலும் யாழ்ப்பாண மாநகர சபையிலும் அவர் செய்யவில்லையே? ஒவ்வொரு இடத்துக்கும் ஒரு சட்டத்தைச் சுமந்திரன் பயன்படுத்துகின்றாரா?

2010, 2015, 2019ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தல்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு பல கோடி ரூபா வழங்கப்பட்டன. மட்டக்களப்பில் 45 இலட்சம் ரூபா சுமந்திரனால் 11 மாகாண சபை உறுப்பினர்களுக்கும் 3 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் வழங்கப்பட்டது.

இது கட்சியின் நிர்வாக செலவுக்காக வழங்கப்பட்டதா அல்லது பிரசாரத்துக்காக வழங்கப்பட்டதா என்பது வழங்கியவருக்குத்தான் தெரியும். ஆகவே, பகிரங்கமாகவே சொல்கிறேன் பணம் வழங்கியது உண்மை. முடிந்தால் வழக்குப் போடுங்கள். இன்னும் பல விடயங்கள் அம்பலப்படுத்த வேண்டியுள்ளது. அதனை நீதிமன்றத்தில் தெரிவிப்பேன்.

ஒட்டுக்குழுக்கள் என்று ரெலோவையும் புளொட்டையும் சுமந்திரன் குற்றஞ்சாட்டுகின்றார். ஆனால், அவர்களுடைய வாக்குகளையும் சேர்த்துத்தான் சுமந்திரன் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தார் என்பதை அவர் உணரவேண்டும் – என்றார்.

